பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை 24.10.2017 கதிர் 352

உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

## இலங்கை அரசக்கு ஐ.நா. விசேட அறிக்கையாளர் சாட்டை

# படையினரை விசாரிப்பது குறித்து நீதிமன்றே தீர்மானிக்க வேண்டும்



நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது...

### யுத்த வெற்றி வீரர்களைப் பாதுகாப்பதாக கூறுவது நீதியை மீறும் நடவடிக்கையாம்

கொழும்பு,ஒக்ரோபர் 24

யுத்த வெற்றிவீரர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரமாட்டோம் என யாரும் கூற முடியாது. அதனை நீதிமன்றமே தீர்மானிக்கவேண்டும். யுத்த வெற்றிவீரர்களை இவ்வாறு பாதுகாப்பதாக கூறுவது சுயாதீன நீதித்துறையின் பண்புகளை மீறுவதைப் போன்றதாகும்.

– இலங்கைக்கான விஜயத்தை முன்னெடுத்த உண்மை, நீதி, நட்டஈடு மற்றும் மீள் நிகழாமையை உறுதி செய்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப் இவ்வாறு இலங்கை அரசுக்குச் சாட்டையடி கொடுக்குமாற்போல கொழும்பில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் பக்கம் 18

### யாழ்ப்பாணத்தில்

## அதிரடிப்படை களமிறக்கம்!

யாழ்ப்பாணத்தில் அவ்வப் போது குழு மோதல்கள் நடந்து வருகின்ற பகுதிகளில் விசேட அதிரடிப்படையைக் களமிறக்க பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் ரோந்து மற்றும் வீதிச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க வட பிராந்தியசிரேஷ்டபொலிஸ் அதிகாரி ரொசான் பெர் பக்கம் 18

## கம்ப வாரிதி ஜெயராஜுக்கு அகவை அறுபது!



இலக்கிய விற்பன்னர் கம்பவாரிதிஇலங்கைஜெயராஜுக்கு இன்று அகவை அறுபது. பக்கம் 18

## நாட்டின் கடன் சுமை ரூ.10 லட்சம் கோடியை தாண்டியது

கொழும்பு, ஒக்.24

இலங்கை அரசின் கடன்தொகைபத்தாயிரம் பில்லியன்ரூபாவை(பத்து லட்சம் கோடி ரூபாவை) தாண்டியுள்ளது.

இலங்கை மத்திய பக்கம் 18

## ஒரு தொகுதி அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பளிக்க தயாராகின்றது அரசு

யாழப்பாணம், ஒக்.24

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் சூடு கிளப்பும் சர்ச்சையாக உருவெடுத்துள்ள பின்னணியில் – பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன்படி சிறைவாசம் அனுபவித்து வரும் கைதிகளில் ஒரு தொகுதியினரை – சுமார் நாற்பது பேர் வரையானோரை – பொது மன்னிப்பு அளித்து விடுவிப்பது குறித்து அரச உயர் மட்டத்தில் தீவிரமாக ஆராயப்படுவதாகத் தெரிகின்றது.

கைதிகள் விவகாரம் தொடர் பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்துவரும் நாள்களில் விடுக்கவிருக்கும் அறிவிப்பில் இந்தவிடயமும் அடங்கியிருக்கும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் பக்கம் 03

### அரசியல் கைதிகள் விவகாரம்

## ஜனாதிபதியின் முடிவு இன்று அல்லது நாளை

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 29 நாள்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் இன்று அல்லது நாளை நிறைவேற்றப்படும் என ஆளுநர் ஊடாக ஜனாதிபதி தமக்கு தெரியப்படுத்தியுள்ளார் என்று மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

நேற்று மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற பக்கம் 18

## சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஒக.24

யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்த இளைஞனின் சடலம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து பொலிஸாரினால் பக்கம் 18

## உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து கட்சித் தலைவர்கள் இன்று ஆராய்வு

### பிரதமர் ரணில் தலைமையில் கூட்டம்

கொழும்பு, ஒக்.24

உள்ளூராட்சித்தேர்தல் தாமதமடைவதால் எழுந்துள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதலைமையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மாகாணசபை அமைச்சர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று இன்று அலரி மாளிகையில் நடைபெறவிருக்கின்றது. பக்கம் 18

## திவுலப்பிட்டியவில் பொலிஸ் சூட்டில் ஒருவர் பலி ஐ.தே.கட்சியின் மாகாணசபை உறுப்பின் கைது!

### அவரது வீட்டிலிருந்து 100 தோட்டாக்கள் மீட்பு; மனைவியும் கைது

கொழும்பு, ஒக்.24

திவுலப்பிட்டிய ஹேன்பிட்ட கெதர என்ற இடத்தில் விசேட அதிரடிப் படையினருக்கும் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் கொள்ளையர் குழு ஒன்றுக்கும் இடையே நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பக்கம் 03

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



# வடக்கில் கணவனை இழந்த பெண்களை தரக்குறைவாக பேசிய இர்ஷாக் ரகுமான் எம்.பி.!

## சமூக செயற்பாட்டாளர்கள் விசனம்

வடக்கில் யுத்தம் காரணமாக பல பெண்கள் கணவனை இழந்து வாழ்ந்து வரும் நிலையில் கணவனை இழந்த பெண்கள் எப்போதும் குறை கூறிக் கொண்டே இருப்பார்கள் என தரக்குறைவாக அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இர்ஷாக் ரகுமான் உரையாற்றியமை தொடர்பில் சமூக ஆர்வலர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நோர்த் மாஸ் மீடியா கல்வி நிறுவனமும் மலையக கலை கலாசார மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த சமூக சேவையில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஊடகத்துறையினருக்கான இரத்தின தீபம் விருது வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் உரையாற்றியமைக்கே இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஊடக நிறுவனங்களாயினும் ஊடகக்கற்கை நிறுவனங்களாக இருந் தாலும் அரசியல் கலப்பின்றி இருத்தல் வேண்டும். இந் நிகழ்வுக்கு கூட வவுனியாவில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சி அரசியல்வாதிகளை அழைத்துள்ள போதிலும் வேறு மாவட்டங்களில் இருந்து ஒரே கட்சியை சேர்ந்த அரசியல் வாதிகளையே அழைத்துள்ளீர்கள்.

இவ்வாறு அழைப்பதானது உங்களது ஊடக நிறுவனம் அரசியல் சார்ந்து பார்க்கப்பட்டு விடும்.

எனவே அரசியலாளர்களை அழைக்கும் போது அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை அழைத்து நிகழ்வுகளை நடத்துங்கள். அது சிறப்பாக இருக்கும் என தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இர்ஷாக் ரகுமான்,

மஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கணவனை இழந்த பெண்களைப் போன்று எதற்கும் குறை கூறிக்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு கணவனை இழந்த பெண்களே எதற்கும் குறை கூறுவார்கள் என பல தடவைகள் தெரிவித்ததுடன் மஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் போன்று அமைச்சராக வருவதற்கு முயற்சிக்கின்றார். அவருக்கு இறைவன் நாட்டம் செலுத்தினால் இது கிடைக்கும். எனினும் அவருக்கு அரசியல் முதிர்ச்சி இன்மையே இவ்வாறு குறை கூறுவதற்கு காரணமாக உள்ளது. நானும் வர்த்தகத் துறையில் இருந்து அரசியலுக்கு வந்தவனே. எனினும் எனக்கு இரண்டு வருடத்தில் அரசியல் தெளிவு கிடைத்துள்ளது. எனினும் மஸ்தானுக்கு அது கிடைக்கவில்லை. எனினும் அவரும் அரசியல் முதிர்ச்சியை அடைந்த பின்னர் கணவனை இழந்த பெண்கள் குறை கூறுகின்றமையைப் போன்று குறை கூறமாட்டார் எனத் தெரிவித்தார்.

இந் நிலையில் நாடாளுமன்ற உறுப் பினரின் இவ் உரையை அவதானித்த சமூக செயற்பாட்டாளர்கள் பலர் வடக்கில் யுத்தத்தினால் கணவனை இழந்த பல பெண்கள் வாழும் நிலையில் இப் பெண்களை அவதூறாக அனுராபுரம் மாவட்ட எம்.பி. பேசுகின்றமை ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்ததுடன் அவர் நிகழ்வில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

இதனையடுத்து நிகழ்வுகள் இடம் பெற்ற நிலையில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சில நிமிடங்களில் நிகழ்வு மண்டபத்தில் இருந்து வெளியேறி யிருந்தார். (க-100)

# வடக்கிலும் நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள்!

## வடக்கு ஆளுநர் கூறுகிறார்

இந்த நாட்டில் சிங்கள மக்கள் மட்டுமே நல்லவர்கள் என நாம் நினைத்து வந்தோம். ஆனால், வடக்கிலும் நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

பயாகல இந்து வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் றெஜி னோல்ட் குரே கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கிலும் தெற்கிலும் மனித நேயமிக்க மனிதர்கள் இருக்கின்றார்கள். குறுகிய அரசியல் நோக்கமும் அதிக ஆசை பிடித்த தலைவர்களுமே இந்த மனிதநேயத்திற்கு வேட்டு வைக்கின்றனர்.

ஒரேநாடு ஒரேதேசம் என்று இருந்தால் ஒருதலைவர் இருப்பார். ஆனால் நாடு சிறு துண்டுகளாக இனரீதியாகவும் மத ரீதியாகவும் பிரிக்கப்பட்டால் பல தலைவர்கள் இருப்பார்கள். சிறந்த தலை மைத்துவம் உருவாக பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செய்பவர் சிறந்த தலைவராக உருவாகுவார்.

அனைவரும் ஒன்றுபட்டால் தலைமைத்துவம் உருவாகும். ஆகவே அரசியல் வாதிகள் தமது குறுகிய அரசியல் இலா பத்துக்காக போராடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 26 கோடி ரூபா யானையால் சர்ச்சை!

தலதா மாளிகைக்கு 26 கோடி ரூபா செலவில் யானையொன்று கொள்வனவு செய்யப்பட்ட சம்பவத்தில் பெரும் ஊழல் நடந்திருப்பதாக தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டில் மியன்மார் நாட்டில் இருந்து 26 கோடி ரூபா செலவில் கண்டி தலதா மாளிகைக்கு யானை யொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, கேள்விப் பத்திர நடைமுறைகளை புறம் தள்ளி யானை கொள்வனவு செய்யப் பட்டிருந்தது.

திறந்த சந்தையில் ஒன்றரை கோடி ரூபாகும் குறைவாக யானையொன்றைக் கொள்வனவு செய்வதற்கான சாத்தியம் இருக்கையில் , பெரிய தொகை செலவழித்து மியன்மாரில் இருந்து யானை யொன்றைத் தருவித்த சம்பவத்தில் பெரும் ஊழல் நடைபெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கத்திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்களில் ஒருவரான சமந்த குணசேகர என்பவர் இது தொடர்பாக அளித்த புகாரின் பேரில் சம்பவம் தொடர்பில் விசாரிக்க தனிநபர் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தவிசாரணைகளின் முடிவில் யானை கொள்வனவுவிடயத்தில்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை தற்போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன் என அறிவித்துள்ளார்.

# த.மு.கூட்டணியும், இ.தொ.காங்கிரஸும் பிரதான கட்சிகளுடன் கை கோப்பு!

கொழும்பு, ஒக். 24

மலையகத்தின் இரு பிரதான கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தேசிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கள மிறங்கவுள்ளன.

இதற்கமைய, தமிழ் முற்போக்கு கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடனும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனும் கைகோக்கவுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதிக்குள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தேர்தலானது ஏப்ரல் மாதம் வரை பிற்போடப்படுவதற்கான சாத்தியங்களே தென்படுகின்றன.

எனினும், இந்தத் தேர்தலை வெற்றி கொள்வதற்காக பிரதான கட்சிகளும், சிறிய கட்சிகளும் தற்போதிலிருந்தே தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளன.

மலையகத்திலுள்ள ஏனைய சிறு அமைப்புகளும், கட்சிகளும் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்குரிய பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றனஎன்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தரம் 5 புலமைப் பரீட்சை மாவட்ட ரீதியில் முதல் 15 மாணவரை சந்திப்பார் மைத்திரி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முதல் 15 இடங்களைப் பிடித்த மாணவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பிற்காக முதல் 15 இடங்களுக்குள் தேர்வான மாணவர்களை தேசிய சேமிப்பு வங்கியின் ஒழுங்கமைப்பில் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதன் பிரகாரம் அழைத்துச் செல்லப்படும் மாணவர்களின் பெற்றோருக்கும் இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. சித்தியெய்திய மாணவர்களுக்கு பாடசாலைகளில் புகைப்படங்கள் வைப்பதோ அல்லது பெரிய அளவில் நிகழ்வுகளை நடத்து வதையோ தவிர்க்குமாறு மத்திய கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பேர்பச்சுவல் நிறுவனத்திடம் ஐ.தே.கவினர் லஞ்சம்?

கொழும்பு, ஒக். 24

சர்ச்சைக்குரிய மத்திய வங்கிபிணைமுறிமோசடியுடன் தொடர்புடைய பேர்பச்சுவல் நிறுனத்திடம் இருபது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளனர் என ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள் ளது.

அத்துடன், அந்த நிறுவனத்திடம் ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் இருபது பேர் லஞ்சம் பெற்று கொண்டுள்ளமைக்கான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

இந்த ஊழல் மோசடியுடன் தொடர்புடைய நபர்களை அம்பலப்படுத்துவதற்கு, மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், இன்னும் சில மாதங்களுக்கேனும் பதவிக் காலம் நீடிக்கப்பட வேண்டுமெனகோரியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது குறித்து விசாரணை நடத்த வேண்டுமாயின் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

சரியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமாயின்ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்கவேண்டியது அவசியமானது என அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# கல்விச் செயற்பாடு 30இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2017 ஆம்ஆண்டுக்கானஇரண்டாம் பருவ காலக் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முழுநேர மாணவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதி அன்றும் பகுதிநேர மாணவர்களுக்கான வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமையும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் யோ. நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir
செவ்வாய்க்கிழமை
24.10.2017 

# இயக்கச்சியில் இளம் பெண் கேரளக் கஞ்சாவுடன் மீட்பு

கிளிநொச்சி, ஒக்.24

கிளிநொச்சி–பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவின் இயக்கச்சி பகுதியில் வைத்து கேரளகஞ்சாவுடன் இளம்பெண் ணொருவர் கைது செய்யப்பட் டுள்ளார் எனப்பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நேற்று மாலை வெற்றிலைக் கேணி பகுதியிலிருந்து கொள் வனவுசெய்யப்பட்டகஞ்சாபொதி யுடன் திருகோணமலைக்கு செல்லவிருந்த நிலையில், இயக்கச்சி பகுதியில் வைத்து இந்தப்பெண்கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேடபிரிவினரால்இந்தப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பெண் 4.70 கிலோ கிராம் கஞ்சாவை தன் வசம் வைத்தி ருந்தார் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

# 10 நாள்களில் 9 போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வரிசையாக வருகை

கொழும்பு, ஒக்.24

இந்தோனேசியா, தென்கொ ரியா, பங்களா தேஷ், இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடு களின்9போர்க்கப்பல்கள், அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு இடை யில் இலங்கைக்கு வரவுள்ளன.

கடந்த 19ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தோனேசியப் போர்க்கப்பல் நேற்றுப் புறப்பட்டுச் செல்லும் நிலையில், பங்களாதேஷ் போர்க் கப்பல் ஒன்று நேற்று கொழும் புக்கு வரவிருந்தது.

எதிர்வரும் 26 ஆம் திகதி (வியாழனன்று) இரண்டு தென் கொரியப் போர்க்கப்பல்கள் இலங்கை வரவுள்ளன.

அதேவேளை, நவம்பர் 2 ஆம் திகதி இரண்டு இந்தியப் போர்க்கப்பல்களும், நவம்பர் 4 ஆம் திகதி இந்தோனேசியப் போர்க்கப்பல் ஒன்றும் இலங் கைக்கு வரவுள்ளன.

நவம்பர் 7ஆம் திகதி பாகிஸ் தான் போர்க்கப்பல் ஒன்றும், நவம்பர்10ஆம்திகதிசீனப்போர்க் கப் பல் ஒன்றும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வுள்ளன.

குறுகிய கால இடைவெளிக் குள் அதிகளவு வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் இலங்கைக்கு வருகை தருவது குறிப்பிடத்தக் கது.

# புதிய தூதுவர்கள் நேற்று பதவியேற்பு

கனடா, ரஷ்யா, மாலைதீவு, பாகிஸ்தான், எகிப்து ஆகிய நாடு களின் புதிய தூதுவர்கள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் தமது நியமனக்கடிதங்களை கையளித்துப் பதவியேற்றனர்.

# ஆறு நாசகாரிப் போர்க்கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து கொழும்புக்கு

அமெரிக்க கடற்படையின் ஆறு நாசகாரிப் போர்க்கப்பல்கள் இம்மாத இறுதியில் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தரவுள்ளன எனத்தகவல் கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கக் கடற்படையின் விமானந்தாங்கிப் போர்க்கப்பல்ஒன்றுடன் இணைந்து, ஆறு நாசகாரிப் போர்க்கப்பல்கள் இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளன எனக் கூறப்படுகிறது.

இந்தப் போர்க்கப்பல்கள் இம்மாத இறுதியில் – எதிர்வரும் 28ஆம் திகதிக்கும் 31ஆம் திகதிக்கும் இடையில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போர்க்கப்பல்கள் கொழும்பில் ஒரு வாரகாலம் தங்கியிருக்க வாய்ப்புகள் உள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க விமானந்தாங்கிப் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வருமா என்ற தகவல் இன்னமும் தெளிவாகவில்லை.

இலங்கைக்கு ஒரே நேரத்தில் அதிகளவு அமெ ரிக்கப் போர்க்கப்பல்கள் பயணம் மேற்கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## திவுலப்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி யைச் சேர்ந்த மேல் மாகாண சபை உறுப்பினரான ரந்தீர் றொட்ரி கோவும் மற்றும் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட ரந்தீர் றொட்ரிகோவின் வீட்டில் இருந்து 115 தோட்டாக்கள், குண்டு துளைக்காத அங்கி மற்றும் கைத் துப்பாக்கி வைக்கப் பயன்படுத் தும் உறை ஆகியவற்றைப் பொலிஸார் கண்டுபிடித்தனர் என்றும் –

அது தொடர்பாக அவரின் மனைவியும் கைது செய்யப்பட் டார் என்றும் – மேலும் தெரிவிக்கப் பட்டது.

கொள்ளையிடும் நோக்கில் அப்பகுதியில் குழு ஒன்று பிரவே சித்திருப்பதாகப் பொலிஸாருக் குக் கிடைத்த தகவலை அடுத்து விசேட அதிரடிப் படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டனர் என்றும் –

சந்தேகத்துக்கு இடமான வான் ஒன்றை அவர்கள் வழி மறித்துச் சோதனையிட முற்பட்ட போது அதில் இருந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என் றும் –

பதிலுக்கு அதிரடிப்படை யினர் நடத்திய சூட்டில் வானில் இருந்த ஒருவர் உயிரிழக்க, மற் றொருவர் காயமடைந்தார் என் றும் – கூறப்பட்டது.

உயிரிழந்தவர் முன்னர் கடற் படையில் பணியாற்றிய நாவ லகே குசான் தக்கில குரே என அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து மாகாண சபை உறுப் பினர் ரந்தீர் றொட்ரிகோ உட்பட ஏழுபேர் கைது செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்தே ரந்தீர் றொட்ரிகோவின் வத்தளை வீட்டை பொலிஸார் சோதனை யிட்டனர். வீட்டிருந்த அவரின் மனைவி கைது செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட வானில் இருந் தும் கைக்குண்டுகள், 2 கைத் துப்பாக்கிகள் மற்றும் போலித் துப்பாக்கி ஒன்று என்பன மீட்கப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட் டது. (உ)

## ஒரு தொகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

பொதுமக்களுக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய சம் பவங்கள், முக்கிய அரசுத்தலை வர்கள் மற்றும் மூத்த படை அதி காரிகள் மீதான தாக்குதல்களு டன்தொடர்புடையவழக்குகளில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர் களுக்குத் தற்போதைய நிலை யில் பொது மன்னிப்பு வழங்கப் பட மாட்டாது என்றும் –

குண்டு, வெடிப் பொருள்கள் வைத்திருந்தோர், புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தோர், பயங்கரவாதச் சம்பவங்களுக்கு உதவினோர் என்ற சாரப்பட குற்றச்சாட்டுக்களுக்கு இலக் காகி, அவற்றின் அடிப்படையில் தண்டனைஅனுபவிப்போருக்கே பொது மன்னிப்பு வழங்கப்பட விருக்கின்றதுஎன்றும்–கூறப்பட்டது.

இதேசமயம் –

அதிக எண்ணிக்கையான பொது மக்களின் உயிர்களைக் காவு கொண்ட இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தாக்கு தல், கோட்டை ரயில் நிலையக் குண்டுத் தாக்குதல், ஜெனரல் ஜானக பெரேரா படுகொலைத் தாக்குதல், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே படு கொலைத் தாக்குதல் போன்ற வற்றுடன் சம்பந்தப்பட்டு குற் றத் தீர்ப்பளிக்கப்பட்டோருக்குதற்போ தையநிலையில்மன்னிப்புவழங் கப்படமாட்டாதுஎனக்கூறப்பட்டது.

எனினும் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவைப் படுகொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பான வழக்கில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டோருக் குப் பொது மன்னிப்பு வழங்கப் படுவதை சந்திரிகா விரும்புகின் றார் என்றும்–

அதனால் அந்தக் கைதிகள் பொது மன்னிப்புத்திட்டத்தின்கீழ் விடுவிக்கப்படலாம் என்றும் – மேலும் கூறப்பட்டது.

(பொதுமன்னிப்புத்திட்டத்தின் கீழ்தமிழ்அரசியல்கைதிகள்விடு விப்பு யோசனை ஏற்கனவே ஏன் தாமதமாகியதுஎன்பது பற்றிய விவரம்இன்றையஆசிரியதலை யங்கத்திலும் விளக்கமாக இடம் பெற்றுள்ளது.)

## படையினரை...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குங்கள்**

பயங்கரவாத தடைச்சட் டத்தை உடனடியாக நீக்குவது டன் அதற்குப் பதிலாக கொண்டு வரப்படும் சட்டம் சர்வதேச தரங் களைப் பின்பற்றுவதாக அமை யவேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் தொடர்பான விடயங்களை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும்.

**வட, கிழக்கில் இராணுவத்தை குறைக்கவேண்டும்**

இராணுவத்தினால் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்குமாகாணங்களில் காணப்படுகின்ற இராணுவப்பிர சன்னத்தைக் குறைக்கவேண் டும் என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்பு கின்றோம்.

**காணி விடுவிப்பை விரைவுபடுத்துங்கள்**

இராணுவத்தினரால்கைப்பற் றப்பட்டுள்ள காணித் தொடர் பான ஒரு வரைபடத்தை உடனி யாகதயாரிக்கவேண்டும். காணி விடுவிப்பு தொடர்பான ஒரு நேர அட்டவணை அவசியமாகின் றது. மீளளிக்கப்படாத காணி களுக்கு நட்டஈடு வழங்குவது அவசியமானதாகும். இதுதொடர் பில் இராணுவத்தரப்பினர் மட் டும் முடிவெடுக்காத வகையி லான திட்டம் வேண்டும்.

**கண்காணிப்பதை நிறுத்துங்கள்**

மனித உரிமை காப்பாளர் கள் சமூக செயற்பாட்டாளர்கள் முக்கியமாக பெண்கள் ஆகிய தரப்பினர்மீதானபாதுகாப்புதரப் பின்கண்காணிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கடந்த காலங்களில்செயற்பட்டஆணைக் குழுக்களின்அறிக்கைகள்(வெளி யிடப்படாதவை) உடனடியாக வெளியிடப்பட வேண்டும்.

**காணாமல் போனோர் அலுவலகம்**

சுயாதீன தன்மை, வெளிப் படைத்தன்மை என்பனவற்றின் அடிப்படையில் காணாமல் போ னோர்குறித்தஅலுவலகத்துக்கு ஆணையாளர்கள் நியமிக்கப் படவேண்டும். ஆணையாளர் கள் இலங்கையின் பன் முகத் தன்மைகொண்ட சமூகக் கட்ட மைப்பை பிரதிபலிப்பதாக அமையவேண்டும்.

மாகாண மற்றும் மாவட்ட மட் டங்களில் பாதிக்கப்பட்ட மக் களுடன் கலந்துரையாடுவதற் காக பிரதிநிதிகள் காணாமல்போ னோர் அலுவலகம் சார்பாக நியமிக்கப்படவேண்டும். நாட் டின் பல்வேறு பகுதிகளிலும் இதற்கான அலுவலகங்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த காணாமல்போனோர் அலுவ லகத்தை கண்காணிப்பதற்காக பாதிக்கப்பட்டோரினால் ஒருங் கிணைக்கப்பட்ட ஒரு குழுவை நியமிப்பது குறித்து அர சாங்கம் பரிசீலிக்கவேண்டும்.

**சர்வதேச உதவிகளை பெறுங்கள்**

தடயவியல் விசாரணை களுக்காக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச உதவிகளைப் பெறலாம். காணாமல்போனோர் அலுவலகங்களும் செயற்பாட் டில் நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து செயற்படவேண் டும்.

**உண்மை கண்டறியும் ஆணைக்குழு அவசியம்**

அனைத்து பாதிக்கப்பட்ட சமூகங்களின் நன்மை கருதி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்று நிறுவப் படவேண்டும். இதற்கு ஒரு பரந்துபட்ட ஆணை வழங்கப் படவேண்டும். இதற்கான சட்ட மூலம் விரைவாக கொண்டு வரப்படவேண் டும். உண்மை யைக் கண்டறி யும் ஆணைக் குழுவுக்கான ஆணையாளர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் இடம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**நீதிபதிகளின் தேசியத்தை ஆராயவேண்டாம்**

மனித உரிமை மீறல்களை ஆராய்வது தொடர் பான தற்போதைய நீதிகட்டமைப்பில் காணப்படுகின்றவரையறைகள் குறித்து ஆராய்ந்து முன்னேற் றத்தை ஏற்படுத்த வேண்டும். பொறுப்புக்கூறல் பொறி முறை யில் இடம்பெறவேண்டிய நீதிபதி களின் தேசியத் துவம் தொடர் பான விவாதமானது இந்த செயற்பாட்டை அரசியல் மயப் படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

**நட்டஈடு வழங்கும் திட்டம் அவசியம்**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடுவழங்குவதுதொடர்பாக ஒரு பரந்துபட்ட திட்டம் முன்னெ டுக்கப்படவேண்டும். இது இனம், மதம், உள்ளிட்ட எந்தவொரு விடயத்தையும் கருத்தில் கொள் ளாது முன்னெடுக்கப் படவேண் டும். இந்தவிடயத்தில் பால்நிலை விடயம் கவனத்தில் கொள்ளப் படவேண்டும். குறிப்பாக பெண் கள், குடும்பத்தலைவிகள் தொடர் பாககவனம்செலுத்தவேண்டும். நட்டஈடு வழங்குதலானது உண்மை மற்றும் நீதியை புறந் தள்ளுவதற்காக பயன் படுத்தப் படக்கூடாது. நட்டஈடுசெயற்பாடா னது பொறுப்பு தன்மையுடன் செயற்பட வேண்டும்.

**காணி ஆணைக்குழு அவசியம்**

இது உண்மையைக் கண்ட றியும் ஆணையுடன் தொடர்பு படுவது பயனுள்ளதாக இருக் கும். காணிவிடுவித்தல் தொடர் பான ஒரு கால அட்டவணை யுடன் ஒரு வரைபடம் உடன டியாகத் தயாரிக்கப்பட வேண் டும். இராணுவத்தரப்பினர் நாட் டின்பாதுகாப்புக்கு தேவையான காணிகளை மட்டுமே வைத்தி ருக்கவேண்டும். இது இராணு வத்தரப்பினால்மட்டும் ஆராயப் படக்கூடாது. இதற்கான ஒரு பரந்துபட்ட பார்வைக் கொண்ட ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். காணி விவகாரங் களுக்காக ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும். மக்கள் 30 வருடங்களாக தரமற்ற வதி களுடன் வாழ்ந்தமையைக் காணமுடிகின்றது. இது நடுத்தர வருமானம் கொண்ட நாட்டுக்கு பொருத்தமானதல்ல. இது தொடர்பானகொள்கை ஆராயப் படவேண்டும். பாதிக்கப்பட்ட மக் களுக்கு வழங்குவதற்கான வீட்டுத்திட்டமானது மக்களுக்கு பொருத்தமானதாக அமைய வேண்டும்.

**உயிரிழந்தவர்களை நினைவுகூர அனுமதியுங்கள்**

பாதிக்கப்பட்ட மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்வதற்கான உரிமை யை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு நினைவுகூரும்செயற் பாடானது நட்டஈடு பெறுவதைப் போன்ற ஓர் உணர்வைக் கொண்டது. அரசமைப்பு மறுசீர மைப்பு செயற்பாடானது சரி யானமுறையில்முன்னெடுக்கப் படுகின்றது.

**எனது அறிக்கை எவ்வாறு அமையும்?**

நீதித்துறையின் சுயாதீனத் தன்மை, சட்டமா திணைக்களத் திற்கான அதிகாரங்கள், பாது காப்புத்துறை மீளாய்வு என்பன இங்கு ஆராயப்படவேண்டும். அரசமைப்பு மறுசீரமைப்பு இடம்பெறும் தற்போதைய நிலை யில் இது அவசியமாகின்றது. சர்வதேச மனித உரிமை தரங் களை உள்நாட்டில் நிறை வேற்றவேண்டும். குறிப்பாக பல வந்தமாக காணாமல் ஆக்கப் பட்டமை தொடர்பாக சர்வதேச சாசனத்தை இலங்கை அமு லுக்குக் கொண்டுவரவேண்டும். எனது அறிக்கையில் நீதித்துறை மற்றும் சட்டமா அதிபர் திணைக் களம் தொடர்பாக பல பரிந்துரை களை முன்வைக்கவுள்ளேன். காரணம் நிலைமாறுகால நீதித் துறையில் முக்கிய பங்கை வகிக்க உள்ளன. – என்றார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அரசியல் கைதிகள் விடுவிப்பு

இந்த வாரம் அரசுக்கு முக்கிய காலமாகும். பல விடயங்களில் தனது முடிவுகளை அறிவிப்பதாக அரசுத் தலைமை கூறியிருக்கின்றது.

அதில் ஒன்று அரசியல் கைதிகள் விவகாரம்.

அடுத்தது - 'சைட்டம்' மருத்துவக் கல்லூரி தொடர்பான சிக்கல்.

அரசியல் கைதிகள் விடயம், யுத்தம் முடிவுற்று எட்டரை ஆண்டுகள் கழிந்தும் இன்னும் இழுபடுகின்றது.

'சைட்டம்' விவகாரம் கடந்த பத்து மாதங்களாக மருத்துவத் துறைக் கல்வியையே சிதைத்து வருகின்றது.

தனியார்கள் மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவப் பட்டச் சான்றுகள் வழங்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டமையை எதிர்த்து அரச வைத்தியர் சங்கமும் இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் மாணவர்களும் ஆரம்பித்த போராட்டம் இப்போது சூடுபிடித்து உச்ச நிலையில் உள்ளது.

இதனால், கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக அரச பல்கலைக் கழகங்களின் எந்த மருத்துவ பீடங்களிலும், கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இந்த மருத்துவக் கல்லூரிப் பகிஸ்கரிப்பால் ஏறத்தாழ ஒருவருடத்தில் கல்வி கற்று வெளியறும் சுமார் இரண்டு ஆயிரத்து ஐந்நூறு மருத்துவர்களை நாடு இழந்திருக்கின்றது.

அரசியல் கைதிகளின் நிலைமையும் கூட அதுதான். அந்தக் கைதிகளின் முழு வாழ்நாளும் சிறையில் வீணடிக்கப்படும் அவலம் தொடர்கின்றது.

இந்தக் கைதிகள் விடயத்தில் அரசு சில விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராகி வருவதாக உள்வீட்டுச் செய்திகள் கசிகின்றன.

சம்பந்தப்பட்ட சாட்சிகள் வவுனியா நீதிமன்றத்தில் பிரசன்னமாகி சாட்சியமளிக்கத் தயார் என்றால், அநுராதபுரத்துக்கு மாற்றிய அந்த வழக்குகளைத் திரும்பவும் வவுனியாவுக்கு மாற்றுவதற்குத் தங்களுக்கு ஆட்பனை இல்லை என்று அரசுத் தரப்பு - ஜனாதிபதித் தரப்பு - அறிவிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் 'ஆசாரி வரம்கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுப்பாரா?' என்ற மாதிரி, அரசு இணங்கினாலும் சம்பந்தப்பட்ட சாட்சிகள் சம்மதிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அதுபோல, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டு, மேன்முறையீடு செய்யாமல் இருக்கும் - பாரிய குற்றங்களுடன் சம்பந்தப்படாத - அரசியல் கைதிகளை ஜனாதிபதியின் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்க அரசு தயார் எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய பொதுமன்னிப்புத் திட்டங்களுக்கு அவற்றை முன்னெடுப்பதற்கான ஒரு நடைமுறை வழி உள்ளது.

சம்பந்தப்பட்ட வழக்கின் தீர்ப்பை வழங்கிய நீதிபதி மற்றும் சட்டமா அதிபரின் சிபாரிசைப் பெற்று, பொது மன்னிப்புக்கான பரிந்துரையை நீதி அமைச்சர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்படிக் கிடைக்கும் பரிந்துரையின் அடிப்படையில் இறுதி முடிவை எடுத்து, ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குகின்றமை பற்றிய பிரகடனத்தை விடுப்பார்.

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன முன்னர் அமைச்சராக இருந்தபோது, அவரைக் கொல்லமுயன்றவர் என்று கூறப்படும் இளைஞருக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டமை இப்படித் தான்.

இதேபோன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெரிய அளவில் இல்லாத குற்றங்களுடன் சம்பந்தப்பட்டோரை இவ்வாறு பொதுமன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்கும் எண்ணம் அரசுக்கு ஏற்கனவே உண்டு என்றும் -

அதற்கான பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு முன்னைய நீதி அமைச்சரும் பௌத்த சாசன அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்றும் -

பௌத்த மத பீடங்களுடனும் மகாநாயக்கர்களுடனும், பேரினவாத சக்திகளுடனும் அதிக தொடர்பு கொண்டிருந்த விஜயதாஸ ராஜபக்ஷ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானோருக்குப் பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க விரும்பாது தட்டிக்கழித்தார் என்றும் - கூறப்படுகின்றது.

விஜயதாஸ ராஜபக்ஷ பதவியை விட்டுத் தூக்கப்பட்டு இப்போது நிலைமை மாறிவிட்டதால், பொதுமன்னிப்பின் கீழ் விடுவிப்புக்கான சாத்தியங்கள் அதிகரித்திருக்கின்றன என்றும், அதுபற்றிய அறிவிப்பு அரசுத் தரப்பிடமிருந்து எந்நேரமும் வரலாம் என்றும் சில விடயம் தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பல நூற்றுக்கணக்கானோரைப் பலியெடுத்த இலங்கை மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதல், ஜெனரல் ஜானக பெறரா படுகொலைத் தாக்குதல், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டாபுள்ள படுகொலைத் தாக்குதல் மற்றும் அதுபோன்ற அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்ட தாக்குதல்களோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடி மன்னிப்புக்குச் சாத்தியமில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படுகொலை முயற்சி வழக்குத் தொடர்பில் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கும்படி சந்திரிகா கோருவார் என்றும் அதன் அடிப்படையில் அந்த வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு பொதுமன்னிப்புக் கிட்ட வாய்ப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரணமாக குண்டு வைத்திருந்தார்கள், வெடிபொருள் தயாரித்தார்கள், புலிகளுக்கு உதவிவழங்கினார்கள், சிறியதாக்குதல்களை நடத்தினார்கள், வேவுபார்த்தார்கள் என்ற வகையறாக்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நாற்பது முதல் ஐம்பது பேர் வரை பொது மன்னிப்புப் பெறுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

பகுதி, பகுதியாகவேனும் இந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவதன் மூலம் அவர்கள் அனுபவித்துவரும் துன்ப, துயரங்கள், அவலங்களுக்கு ஒரு முடிவு வந்தால் சரி.

# தெற்குத் தலைவர்களின் பாரபட்சத்தாலேயே தனித் தமிழீழப் போராட்டம் உருவெடுத்தது

## அமைச்சர் றிஷாத் கூறுகிறார்



வவுனியா, ஒக். 24

மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளை தென்பகுதி பெரும்பான்மையின தலைவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் தனித் தமிழீழம் கோரி பெரும்எழுச்சிப்போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும்,வர்த்தககைத்தொழில் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற இரத்தின தீப விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரும்பான்மையின அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளும் அவர்களின் செயற்பாடுகளுமே இந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரழிவுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முக்கியகாரணம்.இந்தநிலையை மேலும் மோசமாக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது.

மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளை அவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனித் தமிழீழம் கோரி பெரும் எழுச்சிப் போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது. அதன் பின்னர் முஸ்லிம்களுக்கென தனிக்கட்சி அமைத்து மர்ஹூம் அஷ்ரப் தமது சமூக உரிமைக்காகப் போராடினார். இவைகள் கடந்த கால வரலாறு.

ஊடகவியலாளர்கள் ஊடக தருமத்தையும் நெறிமுறைகளையும் பின்பற்றுவதே ஆரோக்கியமானது. எழுத்திலே நேர்மையும் உண்மைத் தன்மையும் இருக்க வேண்டும். அவர்கள் சந்தர்ப்பவாதிகளாக இருக்கக் கூடாது. தனிப்பட்டவர்களின் கோபதாபங்களை தீர்த்துக் கொள்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது தர்மமும் ஆகாது.

இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் ஏற்பட்ட பிரச்சினைகளும் சந்தேகங்களுமே இன்று நமது நாடு அகதிகளைச் சுமக்கும் நாடாக, அகதிகளை உருவாக்கும் நாடாக, அகதிகளை ஏற்றுமதி செய்யும் நாடாக, துன்ப துயரங்களைச் சுமந்து வேதனையில் தத்தளிக்கும் நாடாக மாறியமைக்குப் பிரதான காரணம். இதனால்தான் காணாமல் போனோரின் உறவினர்கள் வீதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி கண்ணீருடன் அலைந்து திரியும் காட்சியும், சிறைக்கைதிகளை விடுவிக்குமாறு நடக்கும் ஜனநாயக போராட்டங்களும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறானவற்றுக்கு நாங்கள் முடிவு கட்ட வேண்டாமா? இந்த நாட்டில் அனைத்து இனங்களும் நிம்மதியாக வாழ வேண்டாமா? நமது நாட்டிலே சமாதானமும் நல்லுறவும் தழைக்க ஊடகவியலாளர்களின் பங்கே காத்திரமாக அமைகின்றது எனக் கூறினார்.

(க-100)

# புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுவதை தடுத்து நிறுத்த முயற்சிகளை செய்வேன்!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 24

உத்தேச புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதை நிறுத்த தன்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப் போகிறேன் என தேசிய சுதந்திர முன்னணியின்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ சிறையில் இருந்த போது எழுதிய நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொண்டுவரப்பட உள்ள பிரிவினைவாத அரசமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றப்பட்டால், நாட்டின் கெடுதியான பயணம் அன்றில் இருந்து ஆரம்பிக்கும்.

தேங்காயின் விலை தற்போது அதிகம், இதனால் தேங்காய் அல்ல வேறு எதனையாவது அடித்துச் சரி 78 நாடாளுமன்ற உறுப்பினர்களும் புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாக கைகளை உயர்த்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் தினத்திற்கு முதல் நாள் நாடாளுமன்றத்திற்குமேலே சென்று குண்டு ஒன்றை போட்டாவது அதனை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017

மார்பகப் புற்றுநோயானது, அதன் ஆரம்பக் கட்டத்தில் எந்த விதமான நோய் அறிகுறிகள் காண்பிக்காது. புற்றுநோய் வளர்ந்து படிப்படியாக பெரிதாகிப் பரவும்போதே அறிகுறிகளைக் காண்பிக்கும். எனவே இருபது வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் சுய மார்பக பரிசோதனை செய்யும் முறை பற்றி தெரிந்திருந்தல் அவசியமாகும்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

25.10.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : மூலம் மு.இ 8.05 வரை
திதி : பஞ்சமி மு.ப 8.22வரை
சுபநேரம் : 4.32 – 6.02 வரை
இராகுகாலம்: 12.02 – 1.32 வரை

# மாதத இறுதியில் வருகின்றன அமெரிக்க போர்க் கப்பல்கள்!



கொழும்பு, ஒக். 24

அமெரிக்காவின் ஆறு அதி நவீன நாசகாரி போர்க் கப்பல்கள் இம்மாத இறுதியில் இலங்கையை வந்தடைய வுள்ளன.

விமானம் தாங்கிய போர்க் கப்பல் ஒன்றுடன் இணைந்தே இந்தப் போர்க்கப்பல்கள் இலங்கையை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளன.

சீனா, இந்தியா, பாகிஸ்தான், தென்கொரிய போர்க்கப்பல்களும் இலங்கை வரவுள்ளன.

இலங்கை அரசாங்கம் ஏனைய சர்வதேச நாடுகளுடன் தொடர்ச்சியாக பாதுகாப்பு நட்புறவைப் பலப்படுத்தி வரும் நிலையில் சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு கூட்டுப் பயிற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் அமெரிக்காவின் ஆறு போர்க்கப்பல்கள் இந்த மாத இறுதியில் இலங்கை கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளன.

இந்த மாதம் 28 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதிக்குள் இலங்கையில் கொழும்பு துறைமுகத்தை இவை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க கடற்படையின் மிகப்பெரிய விமானம் தாங்கி போர்க் கப்பல்களுடன் இணைந்தே ஏனைய கப்பல்களும் இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளன.

அதேபோல் ஒரு வார காலம் இந்தகப்பல்கள் இலங்கையில் தரித்திருக்க வாய்ப்புகள் உள்ளன எனவும்கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தியாவின் இரண்டு போர்க்கப்பல்கள், சீனாவின் ஒரு போர்க் கப்பல் மற்றும் பாகிஸ்தானிய போர்க்கப்பல் ஒன்றும், தென் கொரியாவின் பிரதான 2 போர்க் கப்பல்களும் இந்த மாத இறுதி மற்றும் அடுத்த மாதம் முதல் வாரத்தினுள் இலங்கைக்கு வரவுள்ளன.

வெவ்வேறு தினங்களில் வருகைதரவுள்ள நிலையில் இந்த போர்க்கப்பல்களுடனும் இணைந்து கூட்டு கடற்படை பயிற்சிகளை இலங்கை கடற்படையினர் முன்னெடுக்கவுள்ளனர்.



## குறைந்த விலையில் விதை நெல் விநியோகம்!

கொழும்பு, ஒக். 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விதை நெல்லை விநியோகிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒரு புசல் விதை நெல்லை ஆயிரத்து 650 ரூபாவுக்கு வழங்க முடியுமென்று மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இம்முறை 42 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமான காணியில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

வறட்சி இதற்குத் தடையாக அமைந்தாலும், விதை நெல்லை தாராளமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட கமநல உதவி ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய மாணவர் கெடேற் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை



கொழும்பு, ஒக். 24

தேசிய மாணவர் கெடேற் திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள மாணவர் சமூகத்தின் மத்தியில் ஒழுக்கம் மற்றும் இலட்சியங்களை ஏற்படுத்துவதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்படுவதாகத் தேசிய மாணவர் கெடேற் படையணியின் வருடாந்த முகாம் வெற்றிக்கிண்ண நிறைவு விழாவில் கலந்துகொண்டு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (க)

## தேயிலை உற்பத்தியில் இவ்வருடம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 24



தேயிலை உற்பத்தியில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என இலங்கை தேயிலைச் சபை தெரிவித்துள்ளது.

இது 27 தசம் 6 சதவீத வளர்ச்சியாகும். வருடத்தின் முதல்9 மாத காலப்பகுதியில் நாட்டின் தேயிலை உற்பத்தி 6.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தில் 31 கோடி கிலோ கிராம் தேயிலை உற்பத்தியை தேயிலைச் சபை எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது. (க)

## ‘சைட்டம்’ தொடர்பிலான இறுதித் தீர்வு இந்த வாரம்

கொழும்பு, ஒக். 24



மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பிலான இறுதித் தீர்மானம் இந்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது என அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சைட்டம் தொடர்பான இறுதித் தீர்மானம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையாவிடில், அதற்கு எதிராக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறோம் என அரச பல்கலைக் கழக மருத்துவ மாணவர்களின் பெற்றோர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் 250 பெற்றோர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கிழக்கு பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, ஒக். 24

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

பல்கலைக்கழகத்திலிருந்து பேரணியாக சென்ற மாணவர்கள் வீதியில் ஒன்று கூடி அரசியல் கைதிகளை விடு தலை செய்யுமாறு வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படாமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்த கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியத் தலைவர் டினேஸ்காந்த், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி முன்னெக்கப்பட்டுள்ள போராட்டங்களுக்கு ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு வழங்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்து பெறும் போராட்டம் ஒன்றை ஆரம் பித்துள்ளனர்.

அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட தமது வழக்குகளை மீண்டும் வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரி அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று அரசியல் கைதிகள் கடந்த 27 நாள்களான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(க)

## புதையல் தோண்டிய ஐந்து பேர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 24

ஏறாவூர் - தலவாய் பகுதியில் புதையல் தேடும் நோக்கில், நிலத்தைத் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஏறாவூர் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்குஅமைய மேற் கொள்ளப் பட்டசுற்றிவளைப்புக ளின்போதே இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, நிலத்தை தோண்டும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பூஜைப் பொருள்கள் மற்றும் கெப் வாகனம் ஒன்றும் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கைதுசெய்யப்பட்டவர்கள் ஊறணி, கடுவளை, மொனராகலை, ஹெம்மாத்தகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ‘திலீபனின் வழியில் வருகின்றோம்’ இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு!

மட்டக்களப்பு, ஒக். 24

தியாக தீபம் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திலீபனின் வழியில் வருகின்றோம் எனும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு ஜனநாயக போராளிகள் கட்சியின் திருமலை பிராந்தியத்தின் தலைவர் நவமேனன்தலைமையில்திருகோணமலை, குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியவில் நடைபெற்றது.

இந்திய இராணுவத்தின் ஆதிக்கத்திற்கு எதிராகப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து மண்ணிற்காக உயிரை ஈந்த தியாக தீபம் திலீபனின்30ஆம்ஆண்டு நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், திரு கோணமலை மாவட்ட இலவச சட்ட உதவி மையத்தின்பொறுப்பாளர்யோகேஸ்வரன் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த இறுவட்டு, இந்தியாவின் பிரபல புரட்சிப் பாடகர் செல்லப்பாவின் குரல்களில் பாடப்





பட்டு, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைமைச் செயலகத்தின் வெளியீட்டுப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி பாதுகாப்பு பொறுப்பதிகாரி மீது தாக்குதல் நடத்திய இருவர் மறியலில்!

கொழும்பு, ஒக். 24

கொழும்பு மலலசேகர வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்றவைபவமொன்றின் போது ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவின்பொறுப்பதிகாரி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பாதுகாப்பு பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவரை எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்த சந்தேக நபர்கள் இருவரும் மதுபானம் அருந்திய நிலையில் பாட்டு பாடியுள்ளனர்.

இதேவேளை, பாடலை நிறுத்துமாறு பாதுகாப்பு பொறுப்பதிகாரி கால்லகே சமந்த ஜயசுந்தர இந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதன்போது ஏற்பட்ட தகராறில் குறித்த அதிகாரிகள் பாதுகாப்பு பொறுப்பதிகாரி மீது கதிரையால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்படி, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் கான்ஸ்டபிள் நுவன் செனவிரத்ன மற்றும் இராணுவச் சிப்பாய் என்.முத்துநாயக ஆகியோர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால அறிக்கையை திரும்பப் பெற வேண்டும்



கோட்டே கல்யாணி காரக சங்க சபா முடிவு

கொழும்பு, ஒக். 24

இப்போதைய சூழலுக்குப் புதிய அரசமைப்பு பொருத்தமில்லை என்பதால், வழிநடத்தல் குழுவால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை தற்காலிகமாக விலக்கிக் கொள்ளவேண்டும் என்று கோட்டே, சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகாசங்க சபாவின், கல்யாணி காரக சபா ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது.

கோட்டே, சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகாசங்க சபாவின் அனுநாயக்க தேரரான, பேராசிரியர் வண.பெல்லன்வில விமல ரத்ன தேரர், கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தற்காலிகமாக விலக்கிக்கொள்ளப்பட வேண்டும். அரசமைப்பில் திருத்தங்கள்தேவைப்பட்டால் அதனைப் பின்னர், செய்து கொள்ள முடியும்.

புதிய அரசமைப்பு தொடர்பாக காரக சங்க சபாவில், இரண்டுமணி நேரம் விவாதிக்கப்பட்டது.

கோட்டே கல்யாணி காரக சங்கசபாகூட்டத்தில், கோட்டே சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகாசங்க சபாவின் மகாநாயக்கரான, வண.இட்டபனே தம்மாலங்கார தேரர் கலந்து கொள்ளவில்லை. அவர் நேற்றுமுன்தினம் இரவு வெளிநாடு சென்றமையால் இதில் பங்கேற்கவில்லை.

எனினும், மகாநாயக்கரின் ஆசியுடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. காரக சங்க சபாவில் எடுக்கப்பட்ட முடிவை அவர் அங்கீகரிப்பார். இந்த விடயம் தொடர்பாக விரைவில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

வெளியிடப்பட்டுள்ளது வெறும் பரிந்துரைகள் மட்டுமே என்று இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும் கூறியுள்ளனர்.

இது ஒரு வரைவோ அல்லது சட்டமூலமோ அல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும், புதிய அரசமைப்பு இதனை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படவுள்ளது.

புதிய அரசமைப்பை வரைவதற்கு முன்னர் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அது இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)



## கொழும்பில் உள்ள ஏரியில் ஆபத்தான முதலைகள்!

கொழும்பு, ஒக். 24

கொழும்பில் உள்ள ஏரியில் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் முதலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை எல்லையைப் பிரிக்கும் ஏரியிலேயே மனிதர்களை உண்ணும் ஆபத்தான முதலைகள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஏரிக்கு அருகில் பாடசாலையின் மைதானம் ஒன்றும் உள்ளமையால் ஏரியில் உள்ள முதலைகளால் மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஏரிக்கு அருகில் அதிகமான வீடுகள் உள்ளன. வீடுகளில் உள்ளவர்களுக்கும் ஆபத்து ஏற்படும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், உடனடியாக இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் பொது மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தேர்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல்!

கொழும்பு, ஒக். 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், இன்று அலரி மாளிகையில் இடம்பெற இருக்கிறது எனத் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடலில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மாகாணசபை அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

## இலங்கை மருத்துவர்களும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில்!

### காணொலி மூலம் திடுக்கிடும் தகவல் வெளியானது

கொழும்பு, ஒக். 24

ஐ.எஸ். எனப்படும் இஸ்லாமிய தேசம் தீவிரவாதிகளுடன் இணைந்து இலங்கையைச்சேர்ந்த மருத்துவர்களும் பணியாற்றுகின்றனர் என ஐ.எஸ். அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள காணொலி ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் மருத்துவ வசதிகள் பற்றிய சுமார் 15 நிமிடக் காணொலி ஒன்று அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியில் இந்தியாவைச்சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் மருத்துவரான, அபு அல் முகாதில் என்பவர், ஐ.எஸ். அமைப்பின் மருத்துவ வசதிகள் தொடர்பாக உரையாற்றியுள்ளார்.



ரக்காவில் உள்ள ஐ.எஸ். அமைப்பில் மருத்துவ நிலையத்தில் மிக நவீன வசதிகள் இருக்கின்றமையை இந்தக் காணொலி வெளிப்படுத்தியுள்ளது.

இங்கு இந்திய மருத்துவர் பணியாற்றுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கை, ஆஸ்திரேலியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளின் மருத்துவர்கள் இந்த மருத்துவ நிலையத்தில் பணியாற்றுகின்றனர் என இந்திய மருத்துவர் காணொலியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உலகெங்கும் உள்ள மருத்துவநிபுணர்களை இஸ்லாமிய அமைப்புடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, குறிப்பிட்ட இந்திய மருத்துவர் தென் மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று இந்திய புலனாய்வு அமைப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன என்றும் இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மறுசீரமைக்கப்பட உள்ளன வர்த்தகக் கட்டட தொகுதிகள்!

கொழும்பு, ஒக். 24

மேல் மாகாணத்தில் பிரதான நகரங்களில் அமைந்துள்ள பொது வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் மறுசீரமைக்கப்படவுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதனடிப்படையில், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி,



பொரளை, நுகேகொட, மொறட்டுவ, கட்டுப்பெத்த, கல்கிசை ஆகிய நகரங்களில் உள்ள பொது வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



### கொழும்பு பல்கலைக்கழகத்தின்

# கலைப்பீடம் மேலும் ஒரு வாரம் பூட்டப்படும்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தை மேலும் ஒரு வாரம் வரை மூட வேண்டி ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.அண்மையில் இரு மாணவக் குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அந்த பீடம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இதன்போது, இரு மாணவர்கள் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை, அந்தப்பல்கலையின் உப வேந்தர் லக்ஷ்மன் திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், இன்று இது குறித்து கலந்துரையாட, நிர்வாக சபைக்கு உபவேந்தரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதன்போது, கலைப் பீடத்தை மீளத் திறப்பது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது என தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் 24.10.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. சதுர்த்தித் திதி காலை 7.00 மணிவரை. பின்னர் நட்சத்திரம் கேட்டை மாலை 4.45 மணிவரை. பின்னர் மூலம் மரண யோகம் மாலை 5.45 மணிவரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பி.ப. 2.51 மணிமுதல் 04.20 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 10.34 மணிமுதல் 12.04 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *ஐப்பசிமாத வளர்பிறை பஞ்சமி,*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *கேட்டை*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** யோசினமான நாள். வருமானம் குறைந்து காணப்படும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களால் கவலை உண்டாகும். கடன் சுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் உண்டாகும்.

**ரிஷபம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக் கதிகமாகும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். வீண் அலைச்சல்கள் அதிகமாகும்.

**மிதுனம் :** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் தாரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு வாங்க வங்கி உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

**கடகம் :** அனுகூலமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள்.

**சிம்மம்:**சஞ்சலமான நாள். மனச்சஞ்சலம், யோசனை அதிகரிக்கும். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். உறவினர்கள், நண்பர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**கன்னி :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். உறவினர் வரவால் களிப்பும், செலவுகளும் அதிகரிக்கும்.

**துலாம் :** யோகமான நாள். பணம் பலவழிகளாலும் வந்து சேரும். வியாபாரத்தில் பல நுணுக்கங்களைப் புகுத்தி வருமானம் ஈட்டுவார்கள். உத்தியோகத்தில் கௌரவப் பதவிகள் தேடிவரும்.

**விருச்சிகம் :** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு:** அலைச்சல் மிகுந்த நாள். படித்த மாணவர்கள் திறமைக்குத் தகுந்த வேலை தேடி அலைவார்கள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். கடன் வாங்க அலைவார்கள்.

**மகரம் :** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப்பொருள்கள் வந்து சேரும்.

**கும்பம்:**சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடல்நலம் பாதிப்படையும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். பிள்ளைகளால் அலைச்சல் ஏற்படலாம்.

**மீனம் :**நன்மையான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். பழைய நண்பர்கள், உறவினர்கள் வீடுதேடி வருவார்கள். சகோதர உறவு பலப்படும்.

**சந்திராட்டமநாள்: அசுரணி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம், 1, 2 பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் நற்கருமங்கள் தொடங்குவரைத் தவிர்க்கவேண்டும்.**

# நிதிமோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாவதற்கு தயார்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ, வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 300 கோடி ரூபா நிதி மோசடி தொடர்பில், லஞ்ச ஊழல் மோசடி ஆணைக் குழுவிற்கு செல்வதற்கு தாம் தயார் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதிக்கு அமைய, இரண்டரை லட்சம் மெட்ரிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது

புறக்கோட்டையில் விற்பனை செய்யப்படும் அரிசியின் தொகை விலையிலும் பார்க்க, 9 ரூபா அதிக விலையில் இந்த அரிசி கொள்வனவு செய்யப்பட்டதுடன் இதன் மூலம் 300 கோடிக்கும் அதிகமான நிதி மோசடி இடம்பெற்றுள்ளது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பிலான விசாரணை அறிக்கையை கோப் குழு சமர்ப்பித்துள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகள் மேலும் விரைவுபடுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இதேவேளை, இது தொடர்பில் தாம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு செல்வதற்கு தயாராகி வருகிறார் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# மீண்டும் திறக்கப்பட்டது யால தேசிய பூங்கா!




கொழும்பு, ஒக். 24

இரண்டு மாத காலத்திற்கு மேலாக மூடப்பட்டிருந்து யால தேசிய பூங்கா நேற்று முதல் மீண்டும் சுற்றுலாப்பயணிகளுக்காகத் திறக்கப்பட்டது.

வனவிலங்குகளின் தேவைக்காக ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட காலத்திற்கு இது மூடப்படுவது வழமை. இது தேசியப் பூங்காவாக 1938 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இந்த பூங்கா 978 கிலோமீற்றர் பரப்பை கொண்டது. இங்கு கரடி, மான் , காட்டு யானைகள் உள்ளிட்ட மிருகங்கள் மற்றும் பல விசேட பறவைகளும் உண்டு. இலங்கைக்கு முக்கியமான விலங்குகள் பல இங்கு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு தோற்றியோருக்கு தலைமைத்துவ பயிற்சி

*யாழ்ப்பாணம், ஒக். 24*

*இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை யாழ். மாவட்ட இளையோர் ஒன்றியம் நடத்தவுள்ளது.*

*'நாளைக்கான தலைவர்கள்' என்னும் தலைப்பில் நேற்று ஆரம்பமாகிய இந்தப் பயிற்சி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறும்.*

*அங்கு தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும்.*

*இதில் பங்குகொள்ள ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளுமாறு ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ)*

# புதுடில்லி செல்கிறார் மஹிந்த!

கொழும்பு, ஒக். 24

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாதம் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



மஹிந்த ராஜபக்ஷவுடன், முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், புதுடில்லிக்குப் பயணமாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் நடக்கும் மத நிகழ்வு ஒன்றில் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்திய அரசின் பின்புலத்துடன், மஹிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்திருந்த போது, புதுடில்லிக்கு வருமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நிலைமாறும் உலகில் புலம்பெயர் தமிழர்கள்

# போகும் இடம் எல்லாம் தேசியத்தை, மொழியை பறிகொடுப்பது ஏன்?

(லண்டனில் இருந்து லோகன் பரமசாமி)

உலகம் எங்கும் பரந்து வாழும் சமுதாயம் என்பதில் பெருமை கொண்டு வாழ்வது, தமிழ்சமுதாயம் ஆகும். உள்நாட்டு யுத்தத்தால் ஈழத் தமிழர்கள் நாடுகள் பல கடந்து வாழ்கின்றனர். ஆனால், பல பத்தாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து வேலையாள்களாகவும் போர் வீரர்களாகவும் இடம்பெயர்ந்த தமிழர்கள் இன்று அந்தந்த நாடுகளிலேயே தேசியம் பேசும் சுதேசிகளாக மாறி வாழ்கின்றனர்.

உதாரணமாக மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ் உள்ளிட்ட பல நாடுகளில் உள்ள தமிழர்கள் தற்போது தமது மூதாதையர் குடிபெயர்ந்து வாழ்ந்த நாடாகத் தாம் வாழும் நாட்டைப் பாராட்டுகின்றனர். அவர்கள் எல்லோரது பரம்பரைகளும் முன்பு ஒருகாலத் திலே பாக்கு நீரிணை சார்ந்ததாகவே இருந்திருக்கின்றன.

காலப்போக்கில் இதே மக்கள் தமிழக அரசியலிலோ அல்லது சிறிலங்கா அரசியலிலோ தலையிடுவது, வெளிநாட்டு அரசியலில் தாம் தலையிடுவது நல்லதல்ல என்ற மனப்பாங்கை கொண்டிருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

காலனித்துவ காலத்தில் ஒல்லாந்தர்களாலும் போத்துகேயர்களாலும் பிரான்ஸியர்களாலும் பிரித்தானியர்களாலும் தமிழ்தொழிலாளர்கள் இந்து சமுத்திரத்தை அண்டிய தீவுகளுக்கும் இதர சமுத்திரங்களில் அமைந்திருந்த காலனித்துவ நிலைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்கள் இன்று புலம்பெயர்ந்தவர்களாக அல்லாது அந்த காலனித்துவ நிலைகளையே தமது சொந்த தேசமாக எண்ணி வாழ்கின்றனர்.

ஆனால் தற்போது சர்வதேச அரசியல் நிலை மாறிய போக்கிற்கு ஏற்ப இந்திய மத்திய அரசில் இருக்கும் கொள்கை வகுப்பாளர்கள் கிழக்குப் பார்வை (Look East) என்ற அயலுறவுக் கொள்கை பதத்தின் அடிப்படையில் ஆசியான் நாடுகளுடன் நல்லுறவை வைத்து கொள்ளும் நோக்கத்திற்கு இந்திய வம்சாவளியினரை தமது கொள்கைகளுக்கான காரணிகளில் ஒன்றாகக் காட்ட முனைகின்றனர்.

இந்தியா சார்பான, கிழக்காசிய சர்வதேச அரசியலின் விதியை நிர்ணயித்தவர்களாக கூட The norm-builders இந்திய வம்சாவளியினரை, இந்திய கொள்கை வகுப்பாளர்கள் பார்க்கின்றனர். காலனித்துவ காலத் தில் கிழக்கு நாடுகளில் குடியேறிய தென் இந்திய அல்லது இலங்கை தமிழ் இனத்தவர்கள், இந்திய பண்பாட்டை அந்த நாடுகளில் மகிழ்வும் வீரியமும் மிகக்கொண்டு பாராட்டி வருகின்றனர். ஆனால் தற்கால இந்தியா இதே மக்களை பண்பாட்டு தொடர்பாளர்களாக மட்டுமல்லாது, இராஜதந்திர தொடர்புகளுக்கான காரணிகளாகவும் உபயோகிக்கிறது.

தமது தாயகமாக குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் புலம்பெயர் மக்கள் என்ற நிலையிலிருந்து வேறுபட்ட நிலையை அடைந்திருப்பதை கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. நாம் இருக்கும் தேசம் எம்மால் கட்டியெழுப்பப்பட்டது என்ற உரிமை அவர்களுக்கு இந்த எண்ணப்பாட்டை உருவாக்கி இருக்கிறது. இவர்களது பண்பாடு தேசத்துக்கு ஏற்றாற்போல் அங்கு கிடைக்கப்பெறும் வளங்களுக்கு ஏற்றாற்போல் மாறியுள்ளது.

ஆனால் 1980களிலும் 1990 களிலும் அதற்குப் பிறகும் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் கனேடிய தேசத்தில் ரொறன்ரோ நகரில்




மிக விமரிசையாக நடத்திய தெருவிழா இந்திய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இந்தத் தெருவிழா இந்திய தேசிய அல்லது சிறிலங்கா தேசிய பண்புகளுக்கு அப்பால் தமிழ் தேசியத்தை பிரதிப லிக்கும் தன்மையைக் கொண்டிருந்தது.

புலம்பெயர் தமிழர்களின் இந்த தெருவிழா, மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ் போன்ற நாடுகளில் காலனித்துவ காலத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மதம் சார்ந்து விழாக்கள் எடுப்பது போல் அல்லாது மாறுபட்டதாகத் தெரிகிறது. கனேடியப் பிரதமர் மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் விழாவாக இது காணப்பட்டது. இந்த விழா இந்திய சிறிலங்கா ஆட்சி தரப்பு சிந்தனையாளர்கள் மட்டத்தில் நிச்சயம் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய விழாக்களும் காலப்போக்கில் அடுத்தடுத்த பரம்பரை களின் கைக்கு போனதும் ஈழத்தமிழர் தேசியம் என்ற பார்வை மாறிப்போய், கனடாவில் தமிழர் பாரம்பரியத்தின் சிறப்பு என்பதாக அமைந்து போகும் என்ற ஐயம் உள்ளது. ஏனெனில் அங்கே கனேடிய தேசியத்தை வளர்ப்பதிலும், பல்சமுதாய தனித்துவத்தை கொண்ட கனேடிய தேசியத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் அடையாளம் என்ற நிலையை காட்டும் தன்மை அதிகமாக உள்ளதான பார்வை ஒன்று உள்ளது.

இந்தப் பார்வையைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் மக்கள் மத்தியில் தாயக தேசியம் எவ்வாறு பேணப்படுகிறது என்பது குறித்து பல்வேறு சமுதாயங்கள் குறிப்பாக புலம்பெயர் சைப்பிரஸ் மக்கள், புலம்பெயர் இத்தாலிய மக்கள், புலம் பெயர் யூதமக்கள் ஆகிய சமுதாயங்கள் மத்தியிலும் அமைந்துள்ள திட்டங்கள் குறித்து ஆராயப்பட்ட போது யூதர்களின் திட்டம் ஒன்று மிகவும் பொருத்தமான ஒன்றாகத் தெரிகிறது.

இதைவிட மேலும் பல இலாப நோக்கம் அற்ற நிறுவனங்கள் தத்தமது சமுதாயத்தின் மத்தியில் பரீட்சார்த்தமாக



தமது நாடுகளில் இருந்து வெளியேறிய புலம்பெயர் மக்களைப் பொருளாதார, அரசியல், பண்பாட்டு விடயங்களைக் கையாளும் வகையிலான சந்தர்ப்பங்களை உருவாக்கும் சேவையைச் செய்து வருகின்றன.

தாயகத்துடன் புலம்பெயர் மக்களை இணைக்கும் மூலோபாயங்களில் Taglit-Brightright என்ற அமைப்பால் இளம் யூத சமுதாயத்தினரை பிறந்த நாட்டு தேசிய வாழ்விலிருந்து புலம்பெயர் தேசிய வாழ்வு மனோநிலைக்கு கொண்டு வரும் மூலோபாயத் திட்டம் Diasporization strategy வகுக்கப்பட்டு வழி நடத்தப்பட்டு வருகிறது.

சமூக கட்டுமானத்தை உருவாக்குதல், மீள் தயாரிப்படுத்தல், புலம்பெயர் மனோயியல் அடையாளத்திற்கு மாற்றி அமைத்தல் போன்ற சேவைகளில் இந்த அமைப்பு ஈடுபட்டு உள்ளது.

தாய்நாட்டில் சுற்றுலா பயணம் என்ற வகையிலான முயற்சியின் ஊடாக புலம்பெயர் சமுதாய தேசிய அடையாளத்தை கட்டி அமைத்தல் எனும் இந்த முயற்சி, சர்வதேசம் எங்கும் எல்லைகள் கடந்து பரந்து வாழும் புலம்பெயர் இளைய சமுதாயத்தினரை அவரவர் பிறந்த நாடுகளில் ஏற்கனவே பரிச்சயம் ஆகிவிட்ட தேசிய வாழ்க்கை, பண்பாடு ஆகியவற்றிலிருந்து தமது தாய், தந்தையர் அல்லது முன்னோர்கள் வாழ்ந்த தாய்நாட்டிற்கு இயல்பு மாற்றம் பெற வைக்க கூடியதானதாகும். இதன் வெற்றியின் அளவு தொடர்பான ஐயப்பாடுகள் ஆரம்பத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகளை கொண்டிருந்தாலும், நிகழ்காலத்தில் இளையவர்கள் மத்தியிலும், மத்திய தர வயதினர் மத்தியிலும் மிகவும் தாக்கம் விளைவிக்கக் கூடியதாக இருப்பதாக இந்த தாய்நாட்டு சுற்றுலா சென்று வந்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட நேர்காணல் புள்ளிவிவரத் தகவல்கள் காட்டுகின்றன.

தொண்ணூறுகளில் யூதர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஒரு புள்ளிவிவரக் கணிப்பீட்டின்படி இளம் சமூகத்தினர் வேறு சமூகத்து துணைகளைத் தேடிக் கொள்வதில் அதிக நாட்டம் காண்பது தெரிந்து கொள்ளப்பட்டது. இதனால் யூத இனத்தின் தொடர்ச்சி கேள்விக்குரியதாக உருமாறுவதாக அந்த இன ஆய்வாளர்கள் சிலர் அறிக்கைகள் தயாரித்தனர். இந்த அறிக்கைகளிலே மாற்று இனங்களுக்குள் திருமணம் புரிதல் சமூகத்திற்கு மிகவும் தாக்கம் விளைவிக்கும் காரணிகளில் ஒன்றாக பார்க்கப்பட்டது. சமய வழிபாட்டு முறைகளின் அறிவு மிகவும் வீழ்ச்சியைக் கண்டு வருவது கண்டறியப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

# ஐ.நா. சபை உருப்பெற்று அதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

புன்னியாமீன்




முதலாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததும் உலக சமாதானத்திற்கான அறை கூவல்கள் மீண்டும் ஓங்கலாயிற்று. உலக யுத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு உலக மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் சமாதானத்தின் பக்கம் உலக மக்களின் கவனம் ஈர்க்கப்பட்டன. இவற்றின் பெறுபேறாக 1919 ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி உதயமானதே (League of Nation) சர்வதேச சங்கமாகும்.

ஆனால், காலப் போக்கில் சிற்சில நாடுகள் சர்வதேச நலனைவிட தத்தமது சொந்த நலனைக் கருத்திற் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் சர்வதேச ஒத்துழைப்பு எனும் உன்னத நோக்கை அடையும் முயற்சி வெற்றியளிக்காமைக்கு முக்கிய காரணமாயிற்று. சர்வதேச சங்கத்தின் நோக்கம் தோல்வி கண்டதும் மீண்டும் ஓர் உலக மகாயுத்தம் ஏற்படலாயிற்று.

அதுவே இரண்டாம் உலக மகா யுத்தமாகும். இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் சர்வதேச சங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகள் இல்லாத வகையில் ஐக்கிய நாடுகள் சபை என்ற பெயரில் சமாதானத்தை நிலைநாட்டும் ஓர் அமைப்பு, எதிர்கால சந்ததியினரை யுத்த ஆபத்திலிருந்து காப்பாற்றும் நோக்கோடு 1945 இல் தோற்றுவிக்கப்பட்டது.

இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், பிரித்தானியப் பிரதமர் வின்சன் சர்ச்சிலும் அத்திலாந்திக் கடலில் கப்பலொன்றில் (1941.08.14) ஒன்று கூடி உலக சமாதானத்தை ஏற்படுத்த முடிவு செய்து ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டனர்.

ஆரம்பத்தில் இந்த அமைப்பு 1 ஜனவரி 1942 முதல் போர்க்கால கூட்டணியாக செயற்பட்டது. இதையடுத்து 1943 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா ஆகிய நாடுகள் மொஸ்கோவில் ஒன்றுகூடி உலகில் சமாதானத்தை ஏற்படுத்த ஒரு தனி நிறுவனம் அமைக்க வேண்டுமென முடிவுசெய்தன. இவற்றின் விளைவாக யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், கலிபோர்னியாவிலுள்ள, சான் பிரான்ஸிஸ்கோ நகரில் (1945 ஜூலை) 51 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய ஒரு மாநாடு கூட்டப் பட்டது. இம் மாநாட்டிலேயே ஐக்கிய நாடுகள் சாசனம் உருவாக்கப்பட்டது.



1945 ஒக்ரோபர் 24 ஆம் திகதி இந்த சாசனத்தில் சீனா, பிரான்ஸ், சோவியத் நாடு, பிரித்தானியா, அமெரிக்கா ஆகியன கைச்சாத்திடப்பட்ட பின்பே அதே தினத்தில் உத்தியோக பூர்வமான முறையில் ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்றும் ஒக்ரோபர் 24 ஆம் திகதியே ஐக்கிய நாடுகள் தினமாக உலகளாவியரீதியில் கொண்டாடப்படுகிறது.

51 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதலாவது பொதுச் சபை, 1946 ஜனவரி 10 இல், லண்டனிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் மெதடிஸ்த மத்திய மண்டபத்தில் கூடியது. 1960 இல் 100 நாடுகளும், 1980 ஆம் ஆண்டில் 154 நாடுகளும் அங்கத்துவம் பெற்றிருந்த இவ்வமைப்பில் தற்போது 193 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளாக அரபி, மாண்டரின், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்ய மொழி, எஸ்பானிய ஆகியவை உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் பொது நோக்கங்களை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

சர்வதேச சமாதானத்தையும் பொது பாதுகாப்பையும் பேணல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், உறுப்பு நாடுகள் ஒரு நாட்டின் உள்நாட்டு,விவகாரத்தில் பிரிதொரு நாடு தலையிடாதிருத்தல், சர்வதேச பொருளாதார,சமூக, கலாசார மனிதாபிமானப் பிணக்குகளைத் தீர்த்தல், மனித அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாத்தல்.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் சமமானவைகளே, எனவே அங்கத்துவ நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைச் சர்வதேச அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளல் வேண்டும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அமைப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். பொதுச் சபை (General Assamb), பாதுகாப்புச் சபை (Security Council), பொருளாதார, சமூக சபை (Socio Economic Council), நம்பிக்கைப் பொறுப்புச் சபை (Trustieship Council), சர்வதேச நீதி மன்றம் (International Court of Justice), செயலகம் (The Secretariat)

193 அங்கத்துவ நாடுகளையும் இது கொண்டிருக்கும். எல்லா அங்கத்துவ நாடுகளும் 5 பிரதிநிதிகளை பொதுச்சபைக்கு அனுப்பலாம். இருப்பினும் ஒருவர் மட்டுமே வாக்கிற்கு உரித்தானவர். பொதுச்சபை பொதுவாக வருடத்தில் ஒருமுறை கூடும். ஐக்கிய நாடுகள் சபையின் 64 ஆவது வருடாந்த அமர்வு 2009 ஒக்ரோபரில் நியூயோர்க் நகரில் நடைபெற்ற போது சமாதானம் மற்றும் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி, மனித உரிமை விருத்தி, மனிதாபிமான மற்றும் அனர்த்த நிவாரண விடயம், சர்வதேச சட்டங்கள் மற்றும் நீதி, போதைப்பொருள் தடுப்பு, ஆயுதக் களைவு, நிர்வாக விவகாரம், பயங்கரவாதத்தை ஒழித்தல் ஆகிய ஒன்பது விடயங்கள் குறித்த விவாதங்கள் நடைபெற்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளது. சாசனத்தின் வரையறைகளுக்குட்பட்டு எந்தப் பிரச்சினைகளையும், எந்த அங்கத்துவ நாடும் விவாதிக்கலாம். முக்கிய நெருக்கடிப் பிரச்சினைகளைப் பற்றிய முடிவெடுக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியம். இதன் பொறுப்புக்கள் 7 நிர்வாகக் குழுக்கள் மூலம் நிறைவேற்றப்படும்.

அவையாவன: அரசியல் பாதுகாப்பு, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், தர்மகர்த்தா, நீதி, நிர்வாகம், சிறப்பு அரசியல் குழு என்பனவாகும்.

**இன்று (ஒக்.24) ஐக்கிய நாடுகள் தினமாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை வெளி வருகிறது.**

பாதுகாப்புச் சபையின் சில உறுப்பினர்களையும், பொருளாதார சமூக சபையின் அனைத்து உறுப்பினர்களையும், பொதுச் செயலாளரையும் பொதுச் சபையே தேர்வு செய்யும்.

பாதுகாப்புச் சபை: இதன் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 15. நிரந்தர அங்கத்துவ நாடுகள் 5, அவையாவன: சீனா, பிரான்ஸ், ரஷ்யா அமெரிக்கா, பிரித்தானியா. ஏனைய 10 நாடுகளையும் பொதுச்சபை 2 ஆண்டுகளுக்கொரு முறை தேர்வு செய்யும். பாதுகாப்புச் சபையின் அங்கத்தவர் எண்ணிக்கையை 17ஆக உயர்த்துவதற்கும் ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு நிரந்தர அங்கத்துவத்தை வழங்கவும் கொள்கை யளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுவரை இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## மற்றோர் உலக யுத்தம் மூளாதது அதன் வெற்றியெனக் கருதலாம்

அதே நேரம் இந்தியாவும் நிரந்தர அங்கத்துவத்தைப் பெற முயன்று வருகிறது. பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானத்தை எடுக்க 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 4 நாடுகளும் வாக்களிக்க வேண்டும். 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளில் ஒரு நாடாவது பிரேரணையை நிராகரித்தால் நடைமுறைப்படுத்த முடியாது. இவ்விசேட அதிகாரம் 'வீட்டோ' எனப்படும்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)



காலைக்கதிர்
Kalaikkathir






# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.

135




**அத்தியாயம் - VIII**

## ‘ஜெயசிக்குறு’ படையெடுப்பு

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் படி பிரபாகரனது தளமும் வன்னியின் மையப் பகுதியில் அமையப் பெற்றிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கணிப்பு. எனவே, புலிகளின் தலைவரது பிரதான தளத்தைத் தேடி அழிப்பதும் இந்தப் படையெடுப்பின் முக்கிய குறிக்கோளாகும். படை நடவடிக்கை ஆரம்பமானதும் பல்லாயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் விமானக் குண்டு வீச்சுகளின் உதவியோடு பீரங்கிகள், டாங்கிகள் சகிதம் இரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முனைகளில் இருந்து முன்னேறினர்.

மரபு வழி யுத்தத்தில் தேர்ச்சி பெற்றிருந்த விடுதலைப்புலிப் படையணிகளும் ஆக்கிரமிப்பாளரை மூர்க்கமாக எதிர்த்ததால் சண்டை உக்கிரமடைந்தது. ஆக்கிரமிப்பு இராணுவம் நெடுங்கேணியை நோக்கி முன்னேற முயன்ற போது கற்சிலைமடுப் பகுதியிலும் எறிகணைகள் விழுந்து வெடிக்கத் தொடங்கின. இதனால் முல்லைத்தீவில் உள்ள புதுக்குடியிருப்பில், ஒரு வீட்டுக்கு இடம்பெயர்ந்தோம்.

புதுக்குடியிருப்பில் நாம் வசித்த போது, சிங்கள இராணுவமும், விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் ஏவிவிடும் பீரங்கி எறிகணைகளின் பேரோசை நாளாந்த நிகழ்வாகிப் போனது. இதே சமயம், விமானப் படையின் போர் விமானங்கள், அகதி முகாம்கள் மீதும், பொதுசனக் குடியிருப்புகள் மீதும் கண்மூடித் தனமாக நடத்திய குண்டு வீச்சுகளில் பெருந்தொகையில் அப்பாவிப் பொது மக்கள் உயிர் நீர்த்தமை அன்றாட நிகழ்வாகி விட்டது.

எறிகணைகளின் முழக்கங்கள் எமக்கு நன்கு பழக்கமாகிவிட்டன. பீரங்கிகளில் இருந்து ஏவப்படும் எறிகணைகள், மோட்டார் குண்டுகள், டாங்கிகளின் தாக்குதல்கள் ஆகியன வற்றை அவற்றின் ஓசைகளிலிருந்தும் அதிர்வுகளிலிருந்தும் நாம் அனுமானித்துக் கூறமுடிந்தது. இவை எங்கிருந்து – எத்தகைய தொலைவில் இருந்து – நடைபெறுகின்றன என்பதையும் எம்மால் தீர்மானிக்க முடிந்தது.

‘ஜெயசிக்குறு’ படையெடுப்பு ஒரு நீண்ட காலச் சமராக நீடிக்கப்போகின்றது என்பதை நாம் கண்டறிந்திருந்தோம். ஏனென்றால், தனது படைப்பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்க வேண்டுமென பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டிருந்தார். இந்த நோக்கத்துடன் கேணல் கருணாவின் தலைமையிலான மட்டக்களப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போரனுபவம் பெற்ற புலிப்படை வீரர்களை வன்னிக்கு அழைத்து அவர்களை வன்னிப் பெரும் சமரில் ஈடுபடுத்தினார்.

நாள்கள், மாதங்களாகக் கடும் போர் தொடர்ந்தது. ஆயினும், நாங்களும் புதுக்குடியிருப்பு மக்களும் முடிந்த அளவுக்கு வாழ்க்கையை இயல்புநிலை போன்று ஓட்டிக்கொண்டிருந்தோம். ஆயினும், எமது வீட்டுக்கு வரும் விருந்தாளிகள், எமது பகுதியில் விமானத் தாக்குதல்கள் நிகழ்ந்த வேளைகளில், எம்மோடு சேர்ந்து, எமது வீட்டுக் காணிக்குள் கட்டப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள், பதுங்கவும் நேர்ந்தது. விமானத் தாக்குதல் முடிந்ததும் நாங்கள் பதுங்கு குழியில் இருந்து வெளியேறி எமது உரையாடலைத் தொடர்வோம். அத்துடன், விமானத் தாக்குதல் எங்கே நிகழ்ந்தது? உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டனவா? போன்ற செய்திகளையும் அறியவும் காத்திருப்போம்.

> ‘ஜெயசிக்குறு’ படையெடுப்பு ஒரு நீண்ட காலச் சமராக நீடிக்கப் போகின்றது என்பதை நாம் கண்டறிந்திருந்தோம். ஏனென்றால், தனது படைப்பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்க வேண்டுமென பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டிருந்தார். இந்த நோக்கத்துடன் கேணல் கருணாவின் தலைமையிலான மட்டக்களப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போரனுபவம் பெற்ற புலிப்படை வீரர்களை வன்னிக்கு அழைத்து அவர்களை வன்னிப்பெரும் சமரில் ஈடுபடுத்தினார்.

புதுக்குடியிருப்பு ஒரு சிறிய பட்டினம்தான். ஆயினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக சனத்தொகை கூடிய இடமும் அதுதான். ‘புதிய குடியேற்றம்’ என்பதுதான் புதுக்குடியிருப்பு என்பதன் அர்த்தம். நாமும் எம்மைப் போன்று பலரும் இங்கு புதிதாகக் குடியேறியிருந்தோம். பல்வேறு பாரம்பரிய கிராமங்களால் சூழப்பெற்ற இந்தப் பட்டினத்தில், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பல்வேறு சாதிப் பிரிவினர், கத்தோலிக்கர், இந்துக்கள், உள்ளூர் வாசிகள், இடம்பெயர்ந்தோர் எனப் பல வகைப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இராணுவத் தாக்குதல்கள், இனவாத வன்முறைகள், அல்லது பலவந்தமான சிங்களக்குடியேற்றம் ஆகிய காரணங்களால் மட்டக்களப்பு, திருகோணமலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் இருந்து வடக்குக் கரையோரமாக இடம்பெயர்ந்த மக்கள் இறுதியில் புதுக்குடியிருப்பில் குடியேறினர். நாம் புதுக்குடியிருப்பில் வசித்தபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களையும் அங்கு சந்தித்தோம். நாயாறுக்கு அருகில் இருக்கும் கொக்கிளாயில் இருந்து இடம்பெயர்ந்த ஒரு கூட்டுக் குடும்பம், எமக்கு அயலவர்களாக தென்னஞ்சோலைக் காணியில் குடியிருந்தது. சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்கள் காரணமாக, இந்தக் குடும்பத்தினர் தமது சொந்தக் கிராமத்தையும் வீட்டையும் கைவிட்டு வந்து இங்கு வசித்து வருகிறார்கள். இந்தக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள ஆண்கள், தங்களது கடின உழைப்பாலும், விடாமுயற்சியாலும் இந்தக் காணியில் மூன்று குடிசை வீடுகள் அமைத்து, கஷ்டத்துடன் அன்றாடச் சீவியத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் எப்பொழுதுமே குதூகலமாக இருப்பார்கள். எலும்பும் தோலுமாக மெலிந்து போயிருந்த அந்தக் குழந்தைகளின் கலகலப்பு எனக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. உற்சாகமான களிப்பூட்டும் குரல்களால் ‘அன்ரி, அன்ரி’ என்று வேலிக்குள்ளால் என்னை அழைப்பார்கள். ‘உங்களுக்கு என்ன வேண்டும்?’ என்று நான் கேட்பேன். ‘உங்களுடைய கோழிகளின் முட்டைகள் சிலவற்றைத் தருகிறீர்களா? எங்களுடைய கோழி அடை கிடக்கிறது. நீங்கள் முட்டைகளைத் தந்தால் அவற்றை அடை வைக்கலாம்’ என்று குழந்தைகள் சொன்னார்கள். அவர்களுடைய அவசரத்தைப் பார்க்கப் போனால் நான் கொடுக்கப்போகும் முட்டைகளிலேயே அவர்களது வாழ்க்கை தங்கியிருப்பது போல தென்பட்டது. என்னிடம், பல்வேறு வித்தியாசமான இனத்தைச் சேர்ந்த கோழிகள் இருந்தன. அவை, அயல் வீட்டுக்கும் சென்று வருவதுண்டு. அந்த அழகான கோழி இனங்கள் குழந்தைகளின் ஆசையைக் கிளறி இருக்க வேண்டும். அவை போன்ற கோழி இனங்களை வளர்க்க அவர்கள் விரும்பி இருக்கலாம். என்னிடமிருந்த புதிய முட்டைகள் எல்லாவற்றையும் நான் அவர்களிடம் கொடுத்தேன். அப்போது அவர்கள் அளவடைந்த மகிழ்ச்சி உற்றனர்.

ஒரு மாதம் கழித்து தங்கள் வீட்டில் பொரித்த கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை பற்றி சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தனர். கோழி வளர்ப்பு அந்தக் குடும்பத்துக்கு சிறு வருமானத்தைக் கொடுத்ததுடன், சத்துணவு உண்ணும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த மற்றுமொரு குடும்பத்தினர் எங்கள் வீட்டின் பின் பக்கத்தில் இருந்த காணியில் வசித்து வந்தனர். தங்கள் குடும்பத்தின் நகைகளையும் பொருள்களையும் ஈடு வைத்து, அந்த தரவை நிலத்தில் சிறிய குடிசை கட்டி வாழ்ந்து வந்தனர். தங்களது கௌரவத்தை இழந்து போகாது மரியாதையுடன் வாழ வேண்டும் என்பதற்காக அந்தக் குடும்பத்தின் பெற்றோரும் வயது வந்த பிள்ளைகளும் படாதபாடு பட்டனர். தங்களுடைய ஏழ்மையைத் தங்களது நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் வெளிப்படுத்தி, அசல் யாழ்ப்பாணத்தவர்களுக்குரிய தற்பெருமையுடன் தனியாக ஒதுங்கி வாழ்ந்தனர். தாயும் மகளும் தங்களது சொற்ப வருவாய்க்கு ஏற்றவாறு விறகு பொறுக்கி, சிக்கனமாக, எளிமையான உணவு சமைத்து அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

தமிழர்களுக்கே உரித்தான தாராள மனப்பான்மையுடன் இந்தத் தாயும் மகளும் எனக்கு அடிக்கடி, சக்கரைப் பொங்கல், வாழைப்பழம் மற்றும் ருசியான பலகாரங்களையும் அனுப்பி வைப்பார்கள். அந்தக் குடும்பம் விடுதலைப் புலிகளின் நெருக்கமான ஆதரவாளர்கள். ஒரு மகனும், ஒரு மகளும் ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்கள். இன்னொரு மகள், தனது இருபது வயதின் ஆரம்பத்தில் கரும்புலிகள் பிரிவில் ஓர் உறுப்பினராகச் செயற்படுகின்றார். தாயாரின் உருக்கமான வேண்டுகோளில் மனமுருகிய அவரது மகன் புலிகள் அமைப்பில் இருந்து விலகி மீண்டும் குடும்பத்தில் இணைந்துள்ளார். ஆனால், இரு பெண் பிள்ளைகள் புலிகள் அமைப்பில் அங்கத்தவர்களாகச் செயற்பட்டனர். இறுதியாக, வறுமையின் கொடுமை தாங்க முடியாது, இந்தக் குடும்பம் அக்கரைப் பச்சையைத் தேடி வெளிநாடு செல்ல முடிவெடுத்தது. புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்காக அவர்கள் இந்தியா பயணமாகினர். அதன் போது அவர்கள் செல்லமாக வளர்த்த அழகான ‘பொமனேரியன்’ நாய்க்குட்டியை எனது பராமரிப்பில் விட்டுச் சென்றனர்.

(தொடரும்...)

# கம்பவாரிதிக்கு இன்று அகவை 60




அள்ளுதமிழ்ப் பேரழகே!
அன்னை மொழி அலைகடலே!
தெள்ளுதமிழ்ச் சொல்லழகே – வாழ்க!
தித்திக்கும் அறிவுற்று உயர்க!
உள்ளுவது கம்பன் புகழ்
ஓதுவது உண்மைமொழி
வள்ளல் தமிழ் வாஞ்ஜையரே வாழ்க!
வந்தனமும் வாழ்த்துகளும் குவிக!

கற்றபடி அறநிமிர்வு – காட்டுவது தர்மவழி
கம்பன் புகழ் காக்கும் அண்ணல் வாழ்க!
உற்ற அறு பதுநீண்டு ஒப்பறுநன் னூறாண்டு
உண்மையொளி வீசி அண்ணன் வாழ்க
நற்றவங்கள் வாழ்த்திசைக்க நற்றமிழர் ஆசிசொல்ல
நாநிலத்து அறிஞர்குழாம் நயந்துபோற்ற
பொற்றமிழாள் புத்திரனே! போற்றுகம்ப வாரிதியே!
பொன்மனத்து நாயகனே! பொலிந்து வாழ்க!

பட்டிமன்ற மேடைகளின் பாங்குசொல்லும் நாயகனே!
பண்புறையும் சொற்பெருக்கின் பரிதியானோய்!
கட்டழகுப் பேச்சாலே காசினியைக் கட்டிவைத்து
கற்றவரின் உள்ளமுறை கலையின் தேவே!
எட்டநின்று இகழ்வோரும் ஏகியுந்தன் கிட்டவந்து
எழில் தமிழைச் சுவைக்கவைக்கும் ஏந்தல் நீயே!
அட்டதிக்கும் புகழறைந்து – அன்னை தமிழ் ஆசிகொண்டு
அண்ணன்ஜெய ராஜ் நீயும் அகல்நூறாண்டே!

கண்டவர்கள் வியக்கும்வகை கம்பன்விழா பல தந்தாய்!
கருத்துறையும் இசைவிழவு பலவும் ஈந்தாய்!
அண்டம் போற்றுந்தமிழ் ஆடற் கலையொளிர
அற்புதமாம் மேடைதந்து – அவைகள் வென்றாய்!
தெண்டனிட்டு வணங்கிநின்று தீமைக்கு அடிபணியாய்!
தேருமற வழியினர்க்கு நண்பன் ஆவாய்!
மண்டியிட்டுத் தாள்பணிந்து மன்னவனே உன்வழியில்
மாண்புறுநற் பணிசெய்வோம் – ஆசி நல்கு!

அலைகடலுக் கப்பாலே அரிய தமிழ் நாட்டினிலும்
"அறிஞர்க்கு அறஞன்" நீ அன்புத் தமிழர்
நிலைகொள்ளும் நாடெல்லாம் நிறைதமிழை விதைப்பவன் நீ!
நேர்மையிலே நிலைபிறளா நேயன் நீயே!
கலையார்நற் கோயிலதைக் கட்டிக் கொழும்பினிலே
கருத்தோடு மதமகிமை காட்டி னாய் நீ!
தலைமகனே! ஜெயராஜ்எம் தலைவா! தமிழ்த்தாயின்
தயவுற்றுத் தரணியிலே நூறாம் ஆண்டே!

அன்புத் தமிழன்னை ஆசி பலகொண்டு
அண்ணல் எம்மண்ணன் வாழ்க!
மின்னு தமிழ்பேசி மேதை எனநின்று
மேவி நூறாண்டு மிளிர்க!
சொன்ன வழிநின்று துதித்துத் தமிழ்பேச
சொந்தத் தம்பியர் உள்ளோம்!
கன்னற் தமிழ்கொஞ்சும் கம்ப வாரிதி
கடவுள் அருள் கொண்டு உயர்க!

(கம்ப வாரிதிக்கு 60 ஆவது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்)

– கவிஞர் த.நாகேஸ்வரன் –

# பா.ஜ.கவில் பன்னீச்செல்வம் விரைவில் இணைவார்!

மதுரை,ஒக்.24

தமிழகத்துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விரைவில் பா.ஜ.கவில் இணைகிறார் என கர்நாடக மாநில அ.தி.மு.க. செயலாளரும், தினகரன் ஆதரவாளரான வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் பேசியவை வருமாறு:-

ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய அமைச்சர், எங்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும் பார்த்துக்கொள்ள மோடி இருக்கிறார் என்று சொன்னால் என்ன அர்த்தம்? இரட்டை இலைச்சின்னத்தைப் பெறுவதற்கு குறுக்கு வழியில் முயற்சிக்கிறார்களா? இவர்களுக்கு உதவுகின்றமை தான் பிரதமர் மோடிக்கு வேலையா. அவர் நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வில்லையா என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

இரட்டை இலை சின்னம், வரலாற்றுச் சின்னம். அதை முடக்கியவர் பன்னீர்செல்வம் தான். அவர் அ.தி.மு.கவை டில்லியில் அடைவுவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

இரட்டை இலையை முடக்க நாங்கள்தான் காரணம் என்று மனோஜ்பாண்டியன் சொல்கின்றமை ஒரு பொய்யான குற்றச்சாட்டு.

அ.தி.மு.கவில் 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 50 எம்.பிக்கள் இருந்தும் நீட் தேர்வுக்கு எதிராகப் போராடி நாடாளுமன்றத்தை முடக்கவில்லையே ஏன்? இனி இவர்களை நம்பிப் பயனில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



புகழேந்தி பரபரப்பு பேட்டி

# போகும் இடம் எல்லாம்...



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

மொழியின் எதிர்காலம் மிகப்பெரும் தாக்கத்துக்கு உள்ளாகியது. இதன் பொருட்டு சமூக ஆர்வலர்களால் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. பலர் மேலை நாடுகளில் யூத சமூக வளர்ச்சியை சீர்ப்படுத்தும் விதமாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இதன் மூலம் சமூகக் கல்விக் கான பல்வேறு சலுகைகள் உருவாக்கப்பட்டன. இதைவிட மேலும் பல திட்டங்கள் முன்கொண்டு வரப்பட் டன.

குறிப்பிட்ட இந்த முயற்சி இஸ்ரேலை நோக்கியது ஆகும். Taglit& Brightright என்ற வட அமெரிக்க யூத சமூக அமைப்பால் தமது இனத்தில் உள்ள 18 வயதிலிருந்து 26 வய தான இளைஞர், யுவதிகளை இஸ்ரேலுக்கு கொண்டு சென்று யூதாவியல் (Judaism) சமய கருத்துகளைக் கூறுதல், பண்பாடு குறித்த விளக்கங்களைத் தெளிவு படுத்துதல், கலாசார விளக்கங்களைக் கூறுதல் என்பன உட்பட யூத வரலாறு, அவர்களுடைய தற்கால வளர்ச்சி ஆகியவற்றுடன் யூத சரித்திரத்தில் இடம்பெற்ற பல்வேறுபட்ட ஞாபகார்த்த இடங்கள் குறித்த விளக்கச் சித்திரிப்புகள் ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேலும் வாழ்க்கைச் சரித்திரங்கள், சம்பவங்கள் பற்றி விளக்கங்களை மனம் உருகும் வகையிலாக சித்திரித்தல் என்பன இங்கே இடம் பெறுகின்றன. இதிலே முக்கியமானது இஸ்ரேலிய சியோனிசத்தின் உயிரோட்டத்தை சித்திரிக்கும் சம்பவங்களான மசடா மலையின் கதைகள் பெருமாற்றத்தை ஏற்படுத்துவனவாக இந்த தேசிய மாற்ற பயணத்தில் ஈடுபட்ட பல பயணிகள் கூறி உள்ளனர்.

மசடா மலையில், கிறிஸ்தவ வேதாகம நூல் காலத்தில் யூத ஆண் களும் பெண்களும் குழந்தை க ளுமாக எதிரியின் சுற்றிவளைப்புக்குள் ஆளாகிய போது அவர்கள் கூட்டாக தற்கொலை செய்வது என்றும் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்றும் முடிவெடுத்தனர். இதன்போது இடம் பெற்ற சோக நிகழ்வுகளின் சித்திரிப்பும், அங்கே ஆதிகால யூதர்களால் பாவிக்கப்பட்ட நூதனப் பொருள்களும் ஆதாரமாகக் காட்டப்படுவதும் இந்த தேசிய மன மாற்றத்துக்கான காரணமாகக் கூறப்படுகிறது.

மசடா மலையின் மகத்துவம் பற்றி அங்கே மேலைநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு யூத இளைஞர், யுவதிகள் மத்தியில் இன்றும் இஸ்ரேலிய அரசின் பாதுகாப்பும், யூத மக்களின் சுதந்திரமும் அவர்களுக்கான பாதுகாப்பின் உறுதிப்பாடும் எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்தும் வகையில் இனியும் ஒரு முறை மசடா மலை எதிரியின் கைகளில் வீழ்ந்து விடாது பாதுகாப்பது நம் எல்லோரதும் கடமை.

மீண்டும் ஒருமுறை யூதர்களின் வாழ்க்கை அழிவுக்கு உள்ளாவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எல்லோரும் சத்தியம் செய்து கொண்டு அவர்களது பயணம் தொடர்கிறது. மேலும் தனிப்பட்டவர்களின் கதைகளும் இங்கே சொல்லப்பட்டு புலம்பெயர் யூத இளம் சமுதாயத்தை இஸ்ரேலிய தேசியத்தின் பால் வைத்திருப்பதற்கு மிகப்பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலை மாறும் உலகிற்கு ஏற்றவாறு இங்கே பல்வேறு புலம்பெயர் சமுதாயங்களும் தமது தேசியத்தையும் அதன் உயிர்வாழ்வையும் பாதுகாப்பதில் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளநிலையில் தமிழ்ச் சமுதாயம் மட்டும் போகும் இடம் எல்லாம் தமது தேசியத்தையும் மொழி யையும் பறிகொடுத்துச் செல்கின்றமை சரியானதாகத் தெரியவில்லை.

2009ஆம் ஆண்டிலிருந்து நிலை மாறும் உலகத்தில் தமிழ் மக்களது செயற்பாடுகளை நீர்த்துப்போகச் செய்வதில் எவ்வாறு பல்வேறு சக்திகளும் செயற்படுகின்றன. இதில் மேலைதேய அரசியல்விதி தமிழின விடுதலையை ஏன் ஏற்க முடியாது உள்ளன என்பது குறித்து அடுத்து பார்க்கலாம்.

நன்றி: புதினப்பலகை (தொடரும்)

# இல்லாத அரசமைப்பு தொடர்பில் பொய்யான கருத்து பரப்பாதீர்கள்!

## பிரதமர் ரணில் வலியுறுத்துகிறார்







கொழும்பு, ஒக். 24

இல்லாதஅரசமைப்புத்தொடர்பாகபொய்யானகருத்துக்களைப் பரப்பவேண்டாம். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் உண்மைகளைத் தெரிந்து கொண்டுவிமர்சிக்கவேண்டும்.

நாட்டில்பல்வேறுபிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய நிலையில் மக்களைக் குழப்ப வேண்டாம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் அனர்த்தங்களில் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்க விரைவான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நாம் இன்றும் நவீன வசதிகளைப் பயன்படுத்தாத தன்காரணமேஇழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் அதிகளவில் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. எனினும், அனர்த்தங்கள் தொடர்பாக மாற்று வேலைத்திட்டங்களை வெகுவிரைவில் நாம் முன்னெடுப்போம். மக்களைப் பாதுகாக்கும் தரமான வேலைத் திட்டங்களை நாம் சர்வதேசநாடுகளுடன்இணைந்து முன்னெடுப்போம்.

கடந்த ஆண்டில் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நாம் ஒருகோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். அதன் ஒருகட்டமாக இப்போது தெரிவுசெய்யப்பட்டகுடும்பங்களுக்கு நாம் நிதி உதவிகளை வழங்குகின்றோம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நாம் நிவாரணங்களை வழங்கி மக்களின் நிலைமைகளை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களைமுன்னெடுப்போம்.

சர்வதேச நாடுகளின் மூலமாகவும் சர்வதேச வங்கிகளின் மூலமாகவும் நாம் கடன்களையும், உதவிகளையும் பெற்று இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

சர்வதேச நாடுகளில் இவ்வாறான நிலைமைகளில் எல்லாம் ஊடகங்கள் அனர்த்தங்கள் தொடர்பாக வேலைத் திட்டங்கள் தொடர்பிலேயே அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கின்றன. எனினும், இன்று எமது நாட்டில் அதிகளவில் அரசமைப்பு தொடர்பாக மட்டுமே அனைத்து ஊடகங்களும் பேசுகின்றன.

நாம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் நாட்டைப் பிளவுபடுத்தப் போவதாக ஊடகங்கள் கூறுகின்றன. மகாநாயக்க தேரர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் வகையிலும் ஊடகங்கள் கருத்துக்களை முன்வைத்துநாட்டின்நல்லிணக்கத்தை சிதைவடையச்செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

உருவாக்கப்படாத ஓர் அரசமைப்பு தொடர்பாகப் பொய்யான கருத்துக்களைப் பரப்ப வேண்டாம். இன்னும் அரசமைப்பின் ஆரம்ப நடவடிக்கையேனும் முன்னெடுக்காத நிலையில் இல்லாத அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டதாகவும் அது மோசமான ஒன்றாகவும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. இப்போது அரசமைப்பு தொடர்பாகக் கருத்துக்கள் முன்வைக்கவேண்டிய அவசியம் இல்லை.

நாடாளுமன்றத்தில் அரசமைப்புசபை உருவாக்கப்பட்டு இந்தவிடயங்கள்ஆராயப்பட்டு வருகின்றன. நாட்டுக்கு பொருத்தமான, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய, ஐக்கிய இலங்கைக்குள்தீர்வுகளைபெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இன்றும் நாம் நாடாளுமன்றத்தில் கலந்தாலோசித்து அதில் உள்ள முரண்பாடுகளை ஆராய்ந்து தீர்மானம் எடுத்து வருகின்றோம்.

புதிய அரசமைப்பு தொடர்பாகத் தத்தமது கட்சிகளின் கருத்துக்களை முன்வைத்து விவாதம் செய்யவும் நாம் சகல அரசியல்கட்சிகளுக்கும்வாய்ப்புகளை வழங்கியுள்ளோம். இதனைச் சரியான வாய்ப்பாகப் பயன்படுத்தி கட்சிகளும் தமது நிலைப்பாடுகளைமுன்வைக்க வேண்டும். நாம் அரசமைப்பை உருவாக்கும்போது அது தொடர்பானசரியானதெளிவை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் அரசமைப்பு தொடர்பான விமர்சனங்களை முன்வைக்க வேண்டும்.

அதற்கானகாலம்இதுவல்ல. சகலரும் தமது நிலைப்பாடுகளை,காரணிகளை,ஆலோசனைகளை, பிரேரணைகளை முன்வைக்க சரியான காலம் கிடைக்கும், அனைவரதும் இணக்கத்தில் பொதுவான ஓர் அரசமைப்பை உருவாக்க முடியும்.

நாம் அரசமைப்பு பற்றிய நிலைப்பாட்டை முன்வைத்த பின்னர் அதில் முரண்பாடுகள் இருக்குமாயின்அவற்றைவைத்துக்கொண்டு எம்மீதான விமர்சனங்களை முன்வையுங்கள். ஆனால், உருவாக்கப்படாத ஒரு விடயம் தொடர்பாக பொய்யான தகவல்களின் பிரகாரம் இவ்வாறு அரசை குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம்.

மக்களைஒன்றிணைக்கவும் நாட்டைக் கட்டியெழுப்பவும் பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. மக்களின் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அவற்றைச் சரிசெய்ய வேண்டும். அவ்வாறு இருக்கையில் தேவையற்ற கருத்துக்களை முன்வைத்து மக்களை குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ‘லவர்ஸ் லீப்பை’ நாடும் சுற்றுலாப் பயணிகள்!



கொழும்பு, ஒக். 24

நாட்டில் தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ள போதிலும், அதனையும் மீறிவரும் சுற்றுலாப்பயணிகள் சிரமம் பாராது லவர்ஸ்லீப் நீர்வீழ்ச்சியை பார்வையிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா - ஹாவாஎலிய, பொரலந்த ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட பீதுருதால கால வனப்பகுதியில் தன் அழகால் அனைவரையும் ஈர்க்கும் வகையில் லவர்ஸ்லீப் நீர் வீழ்ச்சி அமைந் துள்ளது.

தனது காதலி கால் தவறிக் கீழே விழ செய்வதறியாது காதலனும் குதித்த சம்பவம் இந்த இடத்தில் இடம்பெற்றதாலேயே இந்த பெயர் வந்ததாக செவிவழிக்கதைகள் கூறுகின்றன.

இயற்கை அள்ளித்தந்த அழகு எனும் வரம் ததும்ப நுவரெலியாவில் அமைந்துள்ள லவர்ஸ் லீப் நீர்வீழ்ச்சி உள்நாட்டவர்களை மட்டுமல்லாது, வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்து இழுக்கின்றது.




தற்போது மழை மற்றும் வெயிலுடனான சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இருப்பினும் இந்த நீர்வீழ்ச்சியின் அதீத அழகால் இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நீர்வீழ்ச்சியை நாடி வருகின்றனர்.

# ஐ.நா. சபை உருப்பெற்று...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த ‘வீட்டோ’அதிகார முறை தற்போது பலதரப்பட்ட விமர்சனங் களுக்கு உற்பட்டு வருகின் றது. அதே நேரம் இந்த வீட்டோ அதிகா ரம் ரஷ்யா, சீனாவிடம் இல்லா விடின் மேலைத்தேய நாடுகளின் செல்வாக்கு மிகைத்து விட்டிருக்கும் எனவும் கூறப்படுகிறது.

பாதுகாப்புச் சபையின் நோக்கங் களும், செயற்பா டுகளும் ஐ.நாவின் நோக்கங்களுக்கும், கொள்கை ளுக்கும் ஏற்ப உலக சமாதானத்தை யும், பாதுகாப்பையும் பேணல், சர்வ தேச மோதல்களுக்கு வழிகோலும் அபிப்பிராய பேதங்கள் பற்றி ஆராய் தல், இத்தகைய மோதல்களைத் தீர்ப்பதற்கான வழிகளை அல்லது நிபந்தனைகளை முன்வைத் தல், ஆயுதக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல், சமாதானத் திற்கெ திராக எழும் பிரச்சினைகள், ஆக்கிர மிப்புக்கள் பற்றி ஆராய்ந்து மேற் கொள்ள வேண்டிய வழிமுறை களை முன்வைத்தல்.

இச்சந்தர்ப்பத்தில் பேச்சுகளை மேற்கொள்ளல், ஆக்கி ரமிப்பைத் தடுக்கப் பொருளாதாரத் தடை, ஒழுக்க நடவடிக்கையை எடுத்தல், இராணுவப் பலத்தைப் பிரயோகித் தல் போன்ற படிமுறைகள் மேற் கொள்ளப்பட உள்ளன.

அண்மைக் காலத்தில் ஈராக் மீது அமெரிக்க நேசப்படைகள்தாக்குதல் மேற்கொண்டமை ஐ.நா. மீது அமெ ரிக்காவின் செல்வாக்கை நிரூபிக்கும் ஒரு நிகழ்வாகவே கருதப்படுகிறது.

பொருளாதார சமூக சபை: அங்கத்துவ நாடுகள் 54 ஐக் கொண் டது. 18 நாடுகள் 3 ஆண்டுகள் காலத்துக்குப் பொதுச்சபையால் தெரிவு செய்யப்படும். ஐக்கிய நாடு கள் சபையின் விசேட அமைப்புக் களை ஒன்றிணைக்கும் அமைப்பே இது. இது வருடத்தில் இரு தடவை கள் கூடும் (ஏப்ரல் மாதத்தில் நியூ யோர்க்கிலும், ஜூலை மாதத்தில் ஜெனிவாவிலும் கூடும்). இந்நிறுவ னத்தின் கடமைகள் துணைக் குழுக் களாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற் றப்படுகின்றன. போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் குழு, புள்ளி விவரக் குழு, சனத் தொகைக் குழு, சமூக வளர்ச்சிக் குழு, மனித உரிமை கள்பாதுகாப்புக்குழு, சிறுபான்மையி னரின் பாது காப்புக் குழு, பெண்கள் நல பாதுகாப்புக்குழு மேலும் ஐரோப் பிய ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச் சிக்கும் எனத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

நம்பிக்கைப் பொறுப்புச்சபை: சுதந்திரம் பெறாத நாடுகள் தாம் வளர்ச்சி பெறும்வரை வல்லரசு களின் பொறுப்பில் இருக்கும். அவ் வாறு இருக்கும் நாடுகளால் (உறுப்பு) நிர்வாகிக்கப்படும் நாடுகளைக் கண்காணிக்க இது அமைக்கப்பட் டது. இச்சபையில் 12 உறுப்பினர்கள் இடம்பெறுவர். 3 ஆண்டுகளுக் கொரு முறை பொதுச்சபையால் இத் தெரிவு இடம்பெறும். இன்றைய காலகட்டத்தில் நம்பிக்கைப் பொறுப் புச் சபை முக்கியத்துவம் இழந்த தொரு சபையாகவே திகழ்கிறது.

இதுஹேக்நகரில்அமைந்துள்ளது. இந்நீதிமன்றத்தின் சட்டங்களை ஏற்றுள்ள எந்தவோர் உறுப்பு நாடும் தமது பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள இந்நீதிமன்றத்திடம் சமர்ப் பிக்கலாம். இதில் 15 நீதிப திகள் இருப்பர் (பதவிக்காலம் 9 ஆண் டுகள்).

செயலகம்: ஐ.நா. சபையின் ஏனைய அமைப்புக்களுக்குச் சேவை யாற்றவே பொதுச் செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முதல் வர் செயலாளர் நாயகமாவார். இதன் முதலாவது செயலாளர் நாயகம் டிரக்லி வி என்பவராவார். தற்போதைய செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்ரெஸ் ஆவார்.

செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் சிபார்சின் பேரில் பொதுச்சபையால் தெரிவு செய்யப் படுவார். ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிர்வாகியான இவரது பிரதான கடமை உலக சமாதானத் தையும் பாதுகாப்பையும் பாதிக்கும் எந்த விடயத்தையும் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகும். ஐக்கிய நாடுகள் சபை கொண்டுள்ள நடவடிக்கைகள் விமர்சன ரீதியில் நோக்கப்பட வேண்டியதாகும்.

சர்வதேச சங்கத்தால் உலக சமா தானத்தைப் பேண முடியாமற் போனதன் காரணமாக இரண்டாம் உலக மகாயுத்தம் ஏற்பட்டது. இனி மேல் இதுபோன்றதொரு யுத்தம் ஏற்படக்கூடாது என்பதைப் பிரதா னமாகக் கொண்டு உலக சமாதா னத்தை நிலைநிறுத்த வேண்டியி ருந்தது. உலக மகாயுத்தங்களை எடுத்து நோக்கு மிடத்து நாடுகளுக் கிடையே ஏற்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள் காலகதியில் விஸ்வ ரூபம் எடுப்பதன் காரணமாகவே யுத்தங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

எனவே, உலக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் நாடு களுக்கிடையிலான பிணக்குகள் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டிய தன் அவசியம் உணரப்பட்டிருந் தது.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தப்பட்ட பின் மற்றுமோர் உலக யுத்தம் ஏற்பட வில்லை. அந்த அடிப்படையில் நோக்குமிடத்து ஐ.நா. அமையம் உலக சமாதானத்தை ஏற்படுத்த வில்லையென்று முற்றுமுழுதாகக் கூறமுடியாது. பல சந்தர்ப்பங்களில் ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடு களிடையே ஏற்பட்டுள்ள பிணக் குகளை (குறுங்காலப் பிணக்குகள் அல்ல நீண்ட காலப் பிணக்குகள்) ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்க முடியாமற்போன சந்தர்ப்பங்களும் உள்ளன.

உதாரணமாக, மத்திய கிழக்குப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாமல் இதுவரை ஐ.நாவின் பிரயத்தனங்கள் தோல்வி யிலேயே முடிந்துள்ளன. 1967 ஆம் ஆண்டு ஐ.நாவின் தீர்மானத்தை மீறி இஸ்ரேல், பலஸ்தீன் பகுதிகளை ஆக்கிர மித்தமை, 1968 ஆம் ஆண் டில் சோவியத்- செக்லோஸ்லவியா பிரச்சினை, 1974 ஆம் ஆண்டு துருக்கியின்சைப்ரஸ்படையெடுப்பு, 1991 ஆம் ஆண்டு அமெரிக்க- ஈராக் யுத்தம், அண்மைக் காலத்தில் அமெரிக்க- ஈராக், அமெரிக்க- ஆப்கான் யுத்தம்... இதைப் போன்ற காரணங்களை எடுத்து நோக்கு மிடத்து ஐ.நா. சபை உலக சமாதா னத்தைப் பேணவில்லை என்ற கூற்றில் சில உண்மைகள் இருக்கின் றமை மறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயற் பாடுகளை நடைமுறைப் படுத்து கையில் ஏற்படக்கூடிய சிற்சில பிரச்சினைகள் உலக சமாதானத்திற் கான தலையீடாக அமைந்து காணப் படுகின்றன. ★

# எடப்பாடி, ஊழல் அமைச்சர்களை மாற்றுவதே எங்களின் நோக்கம்



## தங்க தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

திருவள்ளூர்,ஒக்.24

முதலமைச்சர் எடப் பாடி பழனிச்சாமி மற்றும் ஊழல் அமைச்சர்களை மாற்றுவதே எங்கள் அணி யின் நோக்கமாகும் என்று தினகரன் ஆதரவாளரான தங்கதமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்..

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. (அம்மா) அணி சார்பில் புதிய நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் திருப்பச்சூரில் உள்ள திரு மண மண்டபத்தில் நடை பெற்றது.

அதில்அதி.மு.க.அம்மா அணியின் கொள்கை பரப்புச் செயலாளரான தங்க தமிழ்செல்வன் கலந்து கொண்டார்.

பின்னர் தங்கதமிழ்ச் செல்வன்செய்தியாளர்களி டம்கூறியவை வருமாறு:-

கர்நாடகத்தில் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த முதல்வர் மீது முறைப்பாட்டில் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட் டார். அதன் பின் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் அளித்த தீர்ப் பில், மீண்டும் சட்டப் பேரவை உறுப்பினராக அவர் செயற்படலாம் என அறிவிக்கப்பட்டது. இது போல் எங்கள் மீதான வழக்கிலும் இதே போன்ற தீர்ப்பு விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதற்கு முன்னதாக தற்போதைய ஆட்சியை அகற்றுவதை விட முத லமைச்சர் எடப்பாடி பழ னிச்சாமி மற்றும் ஊழல் அமைச்சர்களை மாற்று வதே எங்கள் அணியின் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றுடன் முடிவடைகிறது பேரறிவாளனின் விடுப்பு



பேரறிவாளனின் விடுப்பு இன்றுடன் முடிவடைகிறது. இந்த நிலையில் இன்று மாலை 5 மணிக்குள் பேரறிவா ளன் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட வேண்டும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகன், சாந்தன் மற்றும் பேரறி வாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறை யிலும், முருகனின் மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட் டுள்ளனர்.

இதில், பேரறிவாளன் வேலூர் மாவட் டம் ஜோலார்பேட்டையைச் சேர்ந்தவர். இவரது தந்தை குயில்தாசன். அவர் உடல் நலம் சரியில்லாமல் உள்ளார். எனவே, தந்தையை உடனிருந்து கவனிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து பேரறிவாளனை விடுப்பில் விட வேண்டும் என்று அவரது தாய் அற் புதம்மாள் தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையேற்று, கடந்த ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஒரு மாத விடுப்பில், பல்வேறு நிபந்தனைகளுடன் பேரறி வாளன் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட் டார்.பின்னர் பரோல் முடிவடைய சில நாள்கள் இருந்த நிலையில், பேரறி வாளனின் தாய் அற்புதம்மாள் தமிழக முதல்வருக்கு மீண்டும் ஒரு கோரிக்கை மனு அனுப்பினார். அதில், மகனின் விடுப்புக் காலத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அதைத் தொடர்ந்து பேரறிவாளனுக்கு, மீண்டும் ஒரு மாத பரோல் நீடிப்பு வழங்கப்பட்டது.

இந்தநிலையில், பேரறிவாளனின் பரோல் இன்றுடன் முடிவடைகிறது. இதற்கிடையில், பேரறிவாளன் தாய் அற்புதம்மாள், கணவர் குயில்தாசனின் உடல் நிலையைக் காரணம் காட்டி மீண் டும் வீட்டுப்பு நீடிப்பு வழங்க வேண்டும் என 3ஆவது முறையாக அரசுக்குக் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

# இந்தியாவுக்கு ஆயுதங்களுடன் ஆளில்லா உளவு விமானங்கள்

வொஷிங்டன்,ஒக்.24

தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த இந்தியாவுக்கு ஆயுதங்களுடன் கூடிய ஆளில்லா உளவு விமானங்களை விற் பனை செய்கின்றமை தொடர்பாக அமெரிக்கா பரிசீலித்து வருகிறது என்று தெரிவிக் கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் மோடி, இத்தகைய உளவு விமானங்களை இந்தியாவுக்கு வழங்குமாறு அந்நாட்டின் அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் கேட்டுக் கொண்டார். அதனடிப்படையில், ஆயுதங்கள் இல்லாத 22 கார்டியன் ரக விமானங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்க அரசு சம்மதித்தது.

இந்த நிலையில், அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களுடன்கூடியசிஅவெஞ் சர் ரக ஆளில்லா உளவு விமா னங்களை வாங்க இந்திய விமானப்படை தீர்மானித் துள்ளது.

சுமார் 800 கோடி டொலர் செலவில் இவ்வகையிலான 100 விமானங்களை வாங்க இந்தியாவிருப்பம் தெரிவித்துள்ள நிலையில் இதுதொடர்பாக அமெரிக்க அரசு பரிசீலித்து வருகின்றது என அந் நாட்டின் பாதுகாப்புத்துறை உயரதி காரி தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் 13 பேர் சாவு







அபுஜா,ஒக்.24

நைஜீரியா நாட்டில் போகோ ஹரம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியா நாட்டில் போகோ ஹரம் தீவிரவாதிகள் பொது மக்களைக் குறி வைத்துத் தொடர்ச்சியாகப் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் ஏராளமானோர் இதுவரை கொல்லப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நைஜீரியா நாட்டின் மாய்துகுரி நகரில் போகோ ஹரம் தீவிரவாதிகள் சிலர் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினர். இந்தக் கொடூர தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 13 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்.

மேலும், 5 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு நைஜீரியாவின் மாய்துகுரி நகரில் மக்கள் நடமாட்டமுள்ள பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால், பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

### ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தல்:

## பிரதமராகிறார் ஷின்சோ அபே



ரோக்கியோ,ஒக்.24

ஜப்பானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஷின்சோ அபேயின் சுதந்திர ஜனநாயகக் கட்சி தலைமையிலான கூட்டணி, 312 இடங்களைப் பெற்று ஆட்சியை அமைக்கின்றது.

வடகொரியா மீது உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. இதையடுத்து, வடகொரியாவுக்கு எதிரான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நடவடிக்கை குறித்து நடத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 44 சதவீதம் பேர் வாக்களித்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு வெறும் எட்டுவீத மக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர். யாரை ஆதரிப்பது? என்று இன்னும் தீர்மானிக்கவில்லை என சுமார் 20 வீதம் பேர் குறிப்பிட்டிருந்தனர்.

இதைனையடுத்து, மக்கள் செல்வாக்கு உள்ளபோதே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மீண்டும் பிரதமராகத் தீர்மானித்துள்ள ஷின்சோ அபே கடந்த மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தர விட்டார்.

இதற்கிடையே, பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. மொத்தமுள்ள 465 இடங்களில் சுமார் 1,200 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஜப்பானின் பல பகுதிகளில் லேன் சூறாவளி வீசி வரும் நிலையில் அங்கு கனமழை பெய்து வருகின்றது. ஆனாலும், வாக்குப் பதிவு தொடர்ந்து நடைபெற்றது.

இந்த நிலையில், பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில், மொத்தமுள்ள 465 இடங்களில் ஷின்சோ அபேயின் சுதந்திர ஜனநாயகக் கட்சிதலைமையிலானகூட்டணி 312 இடங்களைப் பெற்றது.

மூன்றில் இரண்டு பங்கு இடம் கிடைத்துள்ளது என்பதால் சுதந்திர ஜனநாயகக் கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியை அமைக்கின்றது. ஷின்சோ அபே மீண்டும் பிரதமராகின்றமை உறுதி என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

## உலக சுகாதார நிறுவன பதவி ஸிம்பாப்வே அதிபர் நீக்கம்



பலத்த எதிர்ப்பு மற்றும் கண்டனத்தைத் தொடர்ந்து ஸிம்பாப்வே அதிபர் ரொபர்ட் முகாபேயை நல்லெண்ண தூதர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றார் என உலக சுகாதார நிறுவன இயக்குநர் டெட்ரோஸ் அதானம் கேபிரியேசுஸ் அறிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே அதிபராக ரொபர்ட் முகாபே (வயது-83) கடந்த 37 ஆண்டு காலமாகப் பதவி வகித்து வருகிறார். இவரை நல்லெண்ணத் தூதராக உலக சுகாதார நிறுவனம் சமீபத்தில் நியமித்தது.

அதற்கான அறிவிப்பை உலகசுகாதாரநிறுவனத்தின் புதிய இயக்குநர் ஜெனரல் டெட்ராஸ் அதானம் காபிரியேசுஸ் வெளியிட்டார். இதற்கு இங்கிலாந்து அரசு, கனடா பிரதமர், ஐ.நா. கண்காணிப்பு குழு, உலக இருதய பெடரேசன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

பலத்த எதிர்ப்பு மற்றும் கண்டனத்தைத் தொடர்ந்து ரொபர்ட் முகாபேயை நல்லெண்ணத் தூதர் பதவியில் இருந்து நீக்கப்படுகிறார் என உலக சுகாதார நிறுவன இயக்குநர் டெட்ரோஸ் அதானம் கேபி ரியேசுஸ் அறிவித்துள்ளார்.

## வடகொரியா மீதான அழுத்தத்தை அதிகரிக்க ட்ரம்ப் - அபே உறுதி



ரோக்கியோ,ஒக்.24

வடகொரியா மீதான அழுத்தத்தை அதிகரிக்க அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே உறுதியேற்றுள்ளனர் என ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகளின் கண்டனங்களைப் பொருட்படுத்தாமல் வடகொரியா பல முறை ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. மேலும், சில மாதங்களுக்கு முன்னர் அணுகுண்டுச் சோதனையையும் நடத்தியது. இதனையடுத்து, அந்நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே ஆகியோர் இணைந்து வடகொரியாவின் மீதான அழுத்தத்தை அதிகரிக்க உறுதியேற்றுள்ளனர் என ஜப்பானின் தலைமை துணை கபினட் செயலர் நிஷிமுரா கூறியுள்ளார்.

# விளையாட்டுத்துறையில் சிறந்த சேவையாளன் விருது



கதிர் ரி.வி. குழுமம் மாவட்ட ரீதியில் கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருபவர்களை இனம்கண்டு ஊக்குவிக்குமுகமாக அவர்களுக்கான விருதுகளைப் பொருத்தமான நிகழ்வுகளில் வழங்கிவருகின்றது.

அந்தவகையில் கடந்த ஐந்து வருடங்களாக யாழ். மாவட்ட ரீதியில் தேசிய போட்டிகளின் தரத்துடன் நடைபெற்றுவரும் மைலோ கிண்ணத்துக்கான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகளை 2013ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்திவரும் யாழ் மாவட்ட செயலக உதைபந்தாட்டப் பயிற்றுநர் பா.முகுந்தன் அவரது சொந்த மண்ணில் வைத்து அவரது உறவுகள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் கதிர் ரி.வி. குழுமம் நேற்றுமுன்தினம் அவருக்கான விளையாட்டுத்துறையில் சிறந்த சேவையாளன் விருதை வழங்கியுள்ளது.

இவருக்கான கௌரவ சான்றிதழ் கதிர் ரி.வி. குழுமத்தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மாவட்ட செயலர் உடுவை தில்லைநடராஜா அவர்களது கையொப்பத்துடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மற்றும் தற்போதைய தேசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

# குடும்பத்திற்கே முன்னுரிமை அளிப்பேன்



நிக் போத்தாஸ்

பாகிஸ்தான் - இலங்கை இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரில் இம்மாத பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் ரி-20 தொடரின் கடைசிப் போட்டிக்காக தான் பாகிஸ்தானின் லாகூருக்கு பயணிக்காமல் இருக்க எடுத்த முடிவை இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் நிக் போத்தாஸ் நியாயப்படுத்தியுள்ளார்.

இலங்கை அணியின் ஏழு வீரர்கள், அணியின் உடற்பயிற்சி நிபுணர் நிர்மலன்தனபாலசிங்கம், தென்னாபிரிக்க முன்னாள் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரரும் தற்போதைய இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளருமான நிக் போத்தாஸ் ஆகியோர் லாகூரில் நடைபெறும் ரி-20 போட்டியில் பங்கேற்காமல் இருக்கத் தீர்மானித்துள்ளனர்.

இத்தொடரின் முதல் இரு போட்டிகளும் அபுதாபியில் நடைபெறவுள்ள நிலையில், லாகூருக்கு பயணிக்காமல் இருக்க வீரர்கள் எடுத்த முடிவு அவர்களை ரி-20 தொடருக்கான தேர்வில் இருந்தும் நீக்கம் செய்தது. மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடருக்கு அந்த வீரர்கள் இல்லாத குழாம் ஒன்றையும் இலங்கை கிரிக்கெட் சபை அண்மையில் அறிவித்துள்ளது.

இது குடும்பத்தை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு. நான் அங்கு செல்கின்றமையை எனது குடும்பத்தினர் அதிகம் விரும்பவில்லை. என்னைப் பொறுத்த வரை எனது குடும்பத்திற்கே முன்னுரிமை அளிப்பேன் என்று போத்தாஸ் தனது தீர்மானம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

அனைவருக்கும் தமது சொந்த முடிவை எடுக்க வாய்ப்புக் கிடைத்தது. இந்த விடயத்தில் திருப்தி இல்லாத நிலையில் எவரும் கட்டாயப்படுத்தப்படவில்லை. இந்த முடிவை எடுப்பது இலகுவானதாக இருக்கவில்லை. இது மதிக்கப்பட வேண்டும் என்று போத்தாஸ் மேலும் குறிப்பிட்டார்.

உலக பதினொருவர் அணிக்காக விளையாட கடந்த மாதம் பல தென்னாபிரிக்க வீரர்கள் லாகூருக்கு பயணித்தமையை சில பாகிஸ்தான் ஊடகங்கள் எனக்கு ஞாபகமூட்டின. அது அவர்களின் முடிவு. அவர்களின் முடிவு எனது முடிவில் தாக்கம் செலுத்த வேண்டிய தேவையில்லை. அனைவரும் அங்கு செல்வதை கிரிக் கெட் சபை கருத்தளவில் விரும்பியது. ஆனால் அதனைச் செய்ய எவருக்கும் அழுத்தம் தரப்படவில்லை என்றும் போத்தாஸ் தெரிவித்துள்ளார்.

# எந்தவொரு வெற்றியும் இன்றி

## மேற்கிந்தியத் தீவுகளில் இருந்து திரும்பும் இலங்கை மகளிர்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் அணிக்கும் அந்நாட்டு மகளிர் அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியிலும் 31 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் தொடரைக் கைப்பற்றி இலங்கை அணியை வெள்ளையடிப்புச் செய்துள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற ஒரு நாள் மற்றும் ரி-20 என அனைத்துப் போட்டிகளிலும் மோசமான தோல்வியைச் சந்தித்திருந்த இலங்கை மங்கையர் அண்டிகுவாவிலுள்ள ஸ்டேன்போர்ட் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியை யாவது வெற்றி பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் களம் கண்டது.

ஆட்டத்தின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்கியது. இதன்படி அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பில் அதிரடியாக ஆடிய டீன்றா டொட்டின் 67 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் ஐந்து சிக்ஸர்கள் உள்ளடங்களாக 112 ஓட்டங்களைப் பெற்றமை சிறப்பம்சமாகும். இது தவிர ஹெய்லி மெத்திவ்ஸ் 34 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஏனைய வீராங்கனைகள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் அமா காஞ்சனா 2 விக்கெட்டுகளையும் சிரிபாளி வீரக்கொடி, ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

160 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனைகள் அடுத்தடுத்து ஆட்டமிழந்த போதிலும் நம்பிக்கை தரும் விதத்தில் ஆடிய சசிகலா சிறிவர்தன மற்றும் ரெபேக்கா வேண்டோர்ட் ஆகியோர் இணைப்பாட்டமாக 84 ஓட்டங்களைப் பெற்றனர்.



எனினும் தேவையான ஓட்ட எண்ணிக்கையை விட மீதமுள்ள பந்துகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்த காரணத்தினால் விக்கெட்டுக்கள் கையிருப்பில் இருந்த போதும் வெற்றி இலக்கை இலங்கை அணியினால் அடைய முடியவில்லை.

இலங்கை அணி சார்பில் ரெபேக்கா வேண்டோர்ட் 39 பந்துகளில் 50 ஓட்டங்களையும் சசிகலா சிறிவர்தன 44 பந்துகளில் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிறப்பாக பந்து வீசிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஹெய்லி மெத்திவ்ஸ் 18 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் ஸ்டெப்னி டெய்லர் ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் டீன்றா டொட்டின் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் தோல்வியின் மூலம் குறித்த சுற்றுப் பயணத்தில் இடம்பெற்ற 3 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் என அனைத்திலும் தோல்வி கண்ட இலங்கை மங்கையர் அணி தொடரில் முழுமையாக இழந்து மற்றொரு மிக மோசமான தோல்வியைப் பதிவு செய்துள்ளனர்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை துரத்தும் சூதாட்டச் சாத்தான்கள்

கிரிக்கெட் உலகில் சூதாட்ட சர்ச்சையுடன் மிகவும் நெருங்கிய அணியாக பாகிஸ்தான் அணி விளங்குகின்றது. 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் போது சூதாட்ட விவகாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முக்கிய 3 வீரர்களுக்கு (சல்மான் பட், மொஹமட் ஆசிப், மொஹமட் ஆமிர்) 5 வருடங்கள் போட்டித்தடையும், சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

அத்துடன் அதே ஆண்டு இங்கிலாந்தின் கவுண்டி அணியுடனான போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சுழல் பந்துவீச்சாளர் தனீஷ் கனேரியாவுக்கு வாழ்நாள் போட்டித் தடையும் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இவ்வருடம் நடைபெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் போதும் சூதாட்டத்தில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. அதில் 6 வீரர்கள் மீது போட்டித் தடை விதிக்க அந்நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இதில் சர்ஜீல் கான் மற்றும் காலித் லத்தீபுக்கு 5 வருடங்கள் போட்டித் தடையும், மொஹமட் இர்பானுக்கு 6 மாதங்களும், மொஹமட் நவாஸுக்கு 2 மாதங்களும் போட்டித் தடை விதிக்கப்பட்டது.

எனினும், 2000ஆம் ஆண்டு சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சலிம் மலிக் மற்றும் அதாவுர் ரஹ்மான் ஆகிய வீரர்களுக்கு வாழ்நாள் தடையும், வசீம் அக்ரம், யுனிஸ்கான், இன்சமாம் உல் ஹக், முஸ்தாக் அஹ்மட், சயீட் அன்வர் மற்றும் அக்ரம் ராசா ஆகிய வீரர்களுக்கு அபராதமும் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவருகின்ற ஒரு நாள் தொடரில் ஆட்ட நிர்ணய சதியொன்று இடம் பெற்றுள்ளது கிரிக்கெட் உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரின் கடந்த 17ஆம் திகதி அதாவது 3ஆவது ஒருநாள் போட்டி நடைபெறுவதற்கு முன்னர், குறித்த ஆட்ட நிர்ணயம் நடத்தப் படவிருந்தது அம்பலமாகியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடர் தற்போது




நடைபெற்று வருகிறது. இதில் முதல் 4 போட்டிகளில் வென்று பாகிஸ்தான் அணி 4:0 என தொடரைக் கைப்பற்றியுள்ளது. இத் தொடரில் இன்னுமொரு போட்டி மீதமிருக்க தன்னைச் சூதாட்டத்தரகர் ஒருவர் அணுகினார் என பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அஹமட், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் முறைப்பாடு அளித்துள்ளார். இந்தச் சம்பவம் பாகிஸ்தான் அணி நிர்வாகத்தை உலுக்கியுள்ளது.

இந்த நிலையில், தம்மைச் சந்தித்த ஒருவர், தன்னுடன் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுமாறும், அதற்காகப் பெருந் தொகைப் பணத்தை வழங்கத் தாம் தயாராக இருக்கின்றோம் என்று கூறினார் என, பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பராஸ் அஹமட் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து உடனடியாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் அறிவித்துள்ளேன் எனவும் சர்பராஸ் கூறியுள்ளார்.

இதையடுத்து, சர்வதேச கிரிக்கெட் சபை முன் முன்னிலையாகிய சர்பராஸ், மேற்படி சம்பவம் குறித்து வாக்குமூலம் ஒன்றையும் அளித்துள்ளார். இவ்வாக்கு மூலத்தில் சூதாட்டத் தரகரை எவ்வளவு காலம் தெரியும்? அந்த நபரிடமிருந்து இதற்கு முன்னரும் பணம் பெற்றிருக்கின்றீர்களா? ஏதாவது பரிசுப் பொருள் களையும் வாங்கியது உண்டா? போன்ற முக்கிய கேள்விகள் சர்பராஸிடம் வினவப்பட்டன. அதற்கு அவர் பதிலளிக்கையில்,

நான் என் குடும்பத்தினருடன் டுபாயைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது ஒரு வர்த்தக நிலையத்தில், முன்பின் அறிமுகமில்லாத நபர் ஒருவர் என்னை அணுகினார். கிரிக்கெட் ரசிகராக இருக்கலாம் என்றும், என்னிடம் கையெழுத்து வாங்கவோ, செல்ஃபி (Selfie) எடுத்துக்கொள்ளவோ விரும்புகிறார் என்று நானும் அவருடன் பேசினேன்.

அப்போது அவர், அடுத்த போட்டியில் (மூன்றாவது போட்டியில்) ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடத் தயாரா என்றும், தயார் என்றால் பெருந்தொகைப் பணத்தைப் பெறலாம் என்றும் ஆசை காட்டினார்.

ஆனால் அதைக் கடுமையாக மறுத்த நான், உடனடியாக அது குறித்துப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும், பாகிஸ்தான் அதிகாரிகளுக்கும் தெரிவித்தேன். இதனையடுத்து, எனக்கும் எனது அணியினருக்குமான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சர்பராஸை அணுகிய அந்த நபர், பாகிஸ்தான் கிரிக்கெட்டுடன் மிகவும் நெருங்கிய, டுபாயில் வசித்து வருகின்ற அஸ்ரப் அன் சாரி என ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கராச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சார்ஜா கிரிக்கெட் மைதானத் தில் கடமை புரிகின்ற ஊழியர் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் வீரரொருவரை சூதாட்டத் தரகரொருவர் அணுகினார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் நஜாம் சேதி தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,

விளையாட்டை ஊழலாக்க நினைக்கும் முயற்சிகளை எப்படித் தவிர்க்க வேண்டும் என்று ஒரு தலைவராகவும், வீரராகவும் அணியில் மற்றவர்களுக்கு நல்ல உதாரணமாக அவர் இருந்துள்ளார். இந்த விடயம் சரியான முறைப்படி கையாளப்பட்டுள்ளது. சர்பராஸுக்கு அதிக மரியாதை கிடைத்துள்ளது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் ஐ.சி.சி இன் ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் அறிவிப்பதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கடந்த ஞாயிறு முதல் இதற்கான விசாரணைகளை ஐ.சி.சி ஆரம்பித்துள்ளதாகவும் சர்வதேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் வற்புறுத்தலின் பெயரில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் ஒரு நாள் தொடரில் பங்குபெறும் வீரர்களுக்கான விதிமுறைகள் சற்று தளர்த்தப்பட்டிருந்தன. நண்பர்களைச் சந்திக்கவும், பொருள்கள் கொள்வனவு செய்தல் மற்றும் வெளியே சாப்பிடப் போகவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள சம்பவத்தால் விதிமுறைகள் மீண்டும் கடுமையாக்கப்பட்டுள்ளன என பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபடுவது மற்றும் சூதாட்ட தரகர்களினால் வீரரொ ருவர் அணுகப்படும் போது அதனை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில் குறைந்தது 6 மாதங்கள் போட்டித்தடை அல்லது வாழ்நாள் தடை விதிக்கவும் ஐ.சி.சி விதிமுறைகளில் சட்டங்கள் உள்ளடங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறப்பான துடுப்பாட்டத்தை எதிர்பார்க்கிறேன் - விராட்கோஹ்லி

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் 30 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம் என தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி கருத்துத் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி தோல்வியைத் தழுவியது. மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களைக் குவித்தது. அணித்தலைவர் விராட் கோஹ்லி சதம் அடித்தார். அவர் 125 பந்தில் 121 ஓட்டங்கள் (9பவுண்டரிகள், 2சிக்ஸர்), தினேஷ்கார்த்திக் 37 ஓட்டங்களையும் குவித்தார். போல்ட் 4 விக்கெட்டுகளையும், சவுத்தி 3விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 284 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி கூறியவை வருமாறு:-

எனது ஆட்டம் திருப்தி அளிக்கும் வகையில் இருந்தது. நியூசிலாந்து அணி தொடக்கத்திலேயே எங்களுக்கு நெருக்கடி கொடுத்தது. 280 ஓட்டங்கள் நல்ல ஓட்ட எண்ணிக்கை என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் டெய்லரும், டாம் லாதமும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ரண் அவுட் தவிர அவர்கள் எங்களுக்கு எந்த வாய்ப்பையும் கொடுக்கவில்லை. இருவரும் இணைந்து 200 ஓட்டங்களைச் சேர்த்தமையின் மூலம் வெற்றிக்குத் தகுதியான அணியாகியுள்ளது.

இன்னும் ஓரிருவர் நன்றாகத் துடுப்பாட்டம் செய்து இருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும். அப்படி நடந்து இருந்தால் 30-40 ஓட்டங்கள் கூடுதலாக வந்து இருக்கும் எம் துடுப்பாட்டக்காரரிடம் இருந்து இதைவிடச் சிறப்பான துடுப்பாட்டத்தினை எதிர்பார்க்கிறேன். நியூசிலாந்து வீரர்கள் நமது சுழற்பந்து வீச்சை சரியான முறையில் கையாண்டனர். வேகப்பந்து வீரர்களையும் மிகவும் நல்ல முறையில் எதிர்கொண்டனர். டாம் லாதம், டெய்லருக்கு தான் அனைத்து பாராட்டுக்களும் சாரும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி மூலம் நியூசிலாந்து அணி 3 போட்டி கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 2ஆவது ஒருநாள் போட்டி நாளை புனேயில் நடக்கவுள்ளது.



## படையினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த வீரர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரும் விடயத்தில் சிறந்த உதாரணமாக பிரேஸிலில் அண்மையில் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைக் குறிப்பிடலாம். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் பொறிமுறையைத் தொடர்ந்தும் தாமதமாக்கவேண்டாம். இவ்வாறு தொடர்ந்தும் இந்தச் செயற்பாட்டை தாமதமாக்குவது உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பல்வேறு கேள்விகளை எழுப்புவதாக அமைந்திருக்கின்றது. எனவே அரசாங்கம் உடனடியாக நம்பகரமான, பரந்துபட்ட, சுயாதீனமான, வெளிப்படைத் தன்மைமிக்க, அனைவரும் பங்கேற்கக்கூடிய பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்வைக்கவேண்டும் என வலியுறுத்துகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு 14 நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்ட உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப் தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவதற்கு முன்பதாக கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து தனது மதிப்பீடுகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தபோதே மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் மேலும் கூறியவை வருமாறு:-

**வடக்கு - கிழக்கு - தெற்குக்கு விஜயம் செய்தேன்**

நான் இலங்கைக்கு ஐந்தாவது தடவையாக விஜயம் செய்து பொறுப்புக்கூறல் பொறிமுறை விடயங்களை ஆராய்ந்திருக்கின்றேன். நான் இம்முறை அளுத்கம, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு, புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தேன். பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்களது குடும்பத்தாரையும் சந்தித்து கலந்துரையாடினேன்.

**சந்தித்த பிரமுகர்கள்**

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், தேசிய சகவாழ்வு, அரச கரும மொழிகள் அமைச்சர், சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்துசமய விவகார அமைச்சர், நீதி அமைச்சர், கல்வி அமைச்சர், ஜனாதிபதி செயலாளர், பாதுகாப்பு செயலாளர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், இராணுவத்தளபதி, கடற்படைதளபதி, விமானப்படைத்தளபதி, தேசியபுலனாய்வு சேவை தலைமை அதிகாரி, பொலிஸ்மா அதிபர், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரசபையின் தலைவர், நல்லிணக்கத்தை கூட்டிணைப்பதற்கான செயலகத்தின் செயலாளர், மனிதஉரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மதத்தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், இராஜதந்திர முக்கியஸ்தர்கள், கல்வியாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், பாதிக்கப்பட்டவர்கள், வடக்கு, மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் உள்ளிட்டோரை சந்தித்துப் பேச்சு நடத்தினேன். எனக்கு முன்னர் இலங்கைக்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஐ.நா. நிபுணர்கள் வருகை தந்துள்ளனர். அவர்களின் விடயங்களையும் நான் கவனத்தில் எடுத்துள்ளேன்.

**எனது முன்னைய விஜயம்**

2015 ஆம் ஆண்டு நான் இங்கு வருகைதந்ததன் பின்னர் தற்போது நிலைமையை பார்க்கும்போது சில மாற்றங்களை அவதானிக்கின்றேன். குறிப்பாக 19 ஆவது திருத்த சட்டத்தைக் குறிப்பிடலாம். நல்லிணக்க பொறிமுறைக்கான ஆலோசனைகளை முன்னெடுப்பதற்கான செயலணி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டாலும் அதன் பங்குதாரர்களாக சிவில் சமூகப் பிரதிநிதிகள் இருந்தனர். மிகவும் குறுகிய காலத்தில் இந்த செயலணியானது விரிவுபட்ட ஆழமான ஓர் அறிக்கையை முன்வைத்தது. இதுவரையான காலப்பகுதியில் இந்த அறிக்கையானது மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கின்றது.

**காணாமல் போனோர் அலுவலகம்**

அடுத்ததாக காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்திற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழுவிற்கான ஆணையாளர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இது ஒரு சுயாதீனமான நியமனமாக இருக்கும் என கருதுகின்றேன். நம்பகரமானவர்களை இதற்கு நியமிக்கவேண்டும்.

**தாமதம் வேண்டாம்**

புதிய அரசாங்கமானது 100 நாள் வேலைத்திட்டத்திலேயே பொறுப்புக்கூறல் தொடர்பான வாக்குறுதியை வழங்கியது. அந்த வாக்குறுதிகள் இலங்கை இணை அனுசரணை வழங்கிய ஐ.நா. பிரேரணையிலும் காணப்படுகின்றது. பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுப்பதில் இலங்கை அரசாங்கத்தில் காணப்படும் தாமதமானது பல்வேறு துறைகளில் கேள்விகளை எழுப்புவதாக அமைந்திருப்பதுடன் நம்பகத்தன்மையை குறைப்பதாகவும் காணப்படுகின்றது.

குறிப்பாக காணி விடுவிப்பு விடயத்தை விரைவு தன்மை இருப்பதாக தெரியவில்லை. பாதுகாப்பு தொடர்பில் இலங்கை பல சவால்களை சந்தித்தது என்பதை மறுப்பதற்கில்லை. அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பை வழங்கவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. எனினும் பொறுப்புக்கூறல் பொறிமுறையின் செயற்பாட்டில் தாமதமானது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்பதையே பல்வேறு நாடுகளின் அனுபவங்கள் கற்றுத்தருகின்றன.

**வேட்டையாட முயற்சிக்கவில்லை**

இங்கு நிலைமாறுகால நீதி தொடர்பான பொறிமுறை என்பது வேட்டையாடுவது அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் இது ஒரு களையெடுப்பும் அல்ல என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இங்கு யுத்தவீரர்களை நீதிமன்றம் முன் கொண்டுவரமாட்டோம் என பல்வேறு தரப்பினர் கூறுவதை அவதானிக்கின்றோம். இது நிலைமாறு கால நீதி தொடர்பான ஒரு தவறான நோக்கத்தை மக்களுக்கு வழங்கி விடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. அதாவது பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான ஒரு பொறிமுறை என காட்டப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இங்கு யாரையும் வேட்டையாட முயற்சிக்கவில்லை.

**விரட்டப்பட்ட முஸ்லிம்கள்**

பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுப்பதாக பொறுப்புக்கூறல் பொறிமுறை அமையும். பாதிக்கப்பட்ட அனைவரும் நீதியை எதிர்பார்க்கின்றனர். 600 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் நீதி எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டனர். இவ்வாறு பட்டியல் நீள்கின்றது. இதுவொரு முடிவில்லாத பட்டியல் என்றே கூறலாம்.

**யுத்த வீரர்களை நீதிமன்றம் முன் கொண்டுவரமாட்டோம் என கூற முடியாது**

பொறுப்புக்கூறல் பொறிமுறையானது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதுடன் சந்தேகநபர்களையும் பாதுகாக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதுமட்டுமன்றி இவ்வாறு யுத்த வெற்றிவீரர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரமாட்டோம் எனக்கூறுவது சுயாதீன நீதித்துறையின் பண்புகளை மீறுவதாக அமைந்திருக்கின்றது. அவ்வாறு செய்ய முடியாது. நீதிமன்றமே இதுதொடர்பான தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

**பிரேஸில் சம்பவம் சிறந்த உதாரணம்**

அண்மையில் பிரேஸில் நாட்டில் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்பாடானது நீதியானது உள்நாட்டில் நிலைநாட்டப்படாவிடின் சர்வதேச மட்டத்திலாவது பெறப்படும் என்பதற்கான ஒரு சான்றாகும். எனவே அரசாங்கம் உடனடியாக நம்பகரமான பரந்துபட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறை திட்டமொன்றை முன்வைக்கவேண்டும் என்பது பிரேஸில் சம்பவமானது மற்றுமொரு காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது.

அந்தவகையில் நான் எனது இலங்கை விஜயம் மற்றும் அவதானிப்புக்கள் மதிப்பீடுகள் தொடர்பாக சில பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு முன்வைக்கின்றேன். இங்கு ஐ.நா. விசேட நிபுணர்களின் பரிந்துரைகள் சட்டத்தினால் பிணைக்கப்பட்டவை அல்ல என்பதையும் நீங்கள் மனதில் கொள்ளவேண்டும்.

**பரிந்துரைகள்**

கால அட்டவணையுடன் கூடிய பரந்துபட்ட மற்றும் சுயாதீனமான நிலைமாறுகால நீதிப் பொறிமுறை ஒன்றை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டும். அந்த பொறிமுறையானது உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்க வேண்டும்.

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக மக்களின் கருத்துக்களை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட விசேட செயலணியின் பரிந்துரைகளின் நன்மைகளை அரசாங்கம் பெறவேண்டும்.

அதுமட்டுமன்றி இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் உதவிகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக பயன்படுத்தவில்லை எனத் தெரிகின்றது. எனவே அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை அலுவலகத்திலிருந்து மேலும் நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

பக்கம் 03

## அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணான்டோ உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கொழும்புத்துறை மணியந்தோட்டப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் காயமடைந்திருந்த இளைஞர் மரணமடைந்தமையைத் தொடர்ந்து யாழ். நகரில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் இரு குழுக்களுக்கிடையேயான மோதலே துப்பாக்கிச் சூட்டில் முடிவுற்றதாகச் சொல்லப்படுகின்றது.

குறிப்பாக இலங்கைப் பொலிஸின் சிறுகுற்றப்பிரிவினரது நடமாட்டம் சிவில் உடையில் அப்பகுதியெங்கும் அதிகரித்துள்ள நிலையில் வடமராட்சியின் துன்னாலைப் பாணியிலானதுப்பாக்கி பிரயோகம் இதுவோ என்ற சந்தேகம் பல மட்டங்களிலும் எழுந்துள்ளது.

துன்னாலைப்பகுதியில் இளைஞன் ஒருவன் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமையை அடுத்து மூண்ட மக்கள் வன்முறையைத் தொடர்ந்து பொலிஸ் வாகனங்கள் சேதமாக்கப்பட்டன; காவலரண் ஒன்றும் உடைத்தெறியப்பட்டது.

பின்னர் அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டு இளைஞர்கள் வேட்டையாடப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டிருந்தது. கைதான இளைஞர்கள் பலர் தொடர்ந்தும் சிறைகளிலுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்தும் அதே சூழல் ஏற்படலாமென்ற அச்சத்தில் அதிரடிப்படை களமிறக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் காணப்படும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்றும் அவர் சொன்னார்.

## சூட்டுக்கொல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

முன்னதாக -

இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்களைப் பொலிஸார் கைதுசெய்யும் வரை சடலத்தைத் தாங்கள் பொறுப்பேற்கப் போவதில்லை என உறவினர்கள் தெரிவித்தனர் என்று செய்திகள் பரவின. அதனால் ஆஸ்பத்திரிப் பகுதியிலும் அந்த இளைஞனின் வீடு அமைந்த பிரதேசங்களிலும் பதற்ற சூழ்நிலை காணப்பட்டது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் 25வயதுடைய டொன்பொஸ்கோ ரிஸ்மன் என்பவரே உயிரிழந்திருந்தார்.

இவரது படுகொலை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

## கம்ப வாதிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இலக்கியத்துறையிலும், சைவசித்தாந்தவிளக்கவுரையிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் தமிழகத்திலும், இலங்கையிலும் தமிழ் வாழும் பிற நாடுகளிலும் போற்றப்படுபவர் ஜெயராஜ்.

அவர் யாழ்ப்பாணம் இந்து அன்னையின் தோன்றல் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அவருக்கு 'காலைக்கதிர்' நாளிதழ் தனது வாசகர்கள் மற்றும் அன்பர்களுடன் சேர்ந்து வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்கிறது. (உ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 29 நாள்களாக தொடர்ச்சியான உணவுதவிர்ப்பு போராட்டத்தை நடத்திவரும் தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை வவுனியா நீதிமன்றத்தில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்ற வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேற்படி அரசியல்கைதிகளின் கோரிக்கை தொடர்பாக அவர்களின் உறவினர்களுடன் கொழும்புசென்று ஜனாதிபதியைச் சந்தித்து பேசியிருந்தோம். இந்நிலையில் இன்றுமதியம் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்ட ஆளுநர் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நாளை (செவ்வாய்) அல்லது நாளை மறுதினம் (புதன்) நிறைவேற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி தமக்கு கூறியுள்ளார் எனத்தெரிவித்தார். அதேவேளை ஜனாதிபதியை சந்தித்தபோது தமிழ் அரசியல் கைதிகளை வேறு குற்றங்களுடன் - குறிப்பாக போதை வஸ்து குற்றங்களுடன் - தொடர் புடைய கைதிகளுடன் தடுத்து வைக்க வேண்டாம் எனவும் கேட்டிருந்தோம். அதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசியல் கைதிகளைத் தனியாக தடுத்துவைப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார் என ஆளுநர் எனக்குத் தெரியப்படுத்தியுள்ளார். - எனசிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளார்.

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிவிடுத்த அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 38 ஆயிரத்து 730 கோடி ரூபா வரை இருந்த கடன் தொகை 2017 ஜூன் இறுதியில் 10 லட்சத்து 16 ஆயிரத்து 390 கோடியாக உயர்ந்துள்ளது என்கிறது மத்திய வங்கி அறிக்கை.

இதில்

மொத்த உள்நாட்டுக் கடன் ஐந்து லட்சத்து 66 ஆயிரத்து 650 கோடி ரூபா உள்ளடங்கும். இந்தக் கடன் கடந்த ஓராண்டில் 32 ஆயிரத்து 500 கோடி ரூபாவால் அதிகரித்துள்ளது.

அதேசமயம் வெளிநாட்டுக் கடன் 45 ஆயிரத்து 160 கோடி ரூபாவால் கூடியுள்ளது.

உள்நாட்டுக்கடன் 6.1 வீதத்தினாலும் வெளிநாட்டுக்கடன் 11.2 வீதத்தினாலும் அதிகரித்திருப்பதாக மேலும் கூறப்பட்டது. (உ)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 24

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு,கிழக்குபல்கலைக்கழக மாணவர்கள்மாபெரும்கையெழுத்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தால் பல்கலைக்கழக முன்றிலில் நேற்றுக் காலை வேளையில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.





இதில் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்கும் விடுதலைக்கும் வலுச் சேர்க்கும் வகையில் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தப் போராட்டத்தில் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளாக, அநுராதபுரம் சிறைச்சாலையில் 28 நாள்களைக் கடந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் மற்றும் விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து யாழ். பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் கிருஷ்ணமேனன் தெரிவித்தவை வருமாறு:-

அரசியற் கைதிகள் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பில் எமக்குத் திருப்தி ஏற்படவில்லை.

எமது நாட்டின் நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் தற்போது நாட்டில் இல்லை அவர்கள் வந்தவுடன் இதற்கான தீர்வு குறித்து கலந்துரையாடவுள்ளேன் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும் அதில் எமக்கு திருப்தியில்லை. அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் 3 அரசியல் கைதிகளினதும் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.



ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# 10 ஊடகவியலாளர்கள் உட்பட 44 பேருக்கு வவுனியாவில் இரத்தின தீப விருது!





வவுனியா, ஒக். 24

வவுனியா மாவட்டத்தில் பத்து ஊடகவியலாளர்கள் உட்பட 44 பேருக்கு இரத்தினதீப தேசிய சமூக விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடக்கு ஊடக கல்விக் கல்லூரியின் நிறுநனர் அ. நபீஸ் தலைமையில் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடை பெற்றது.

மலையக கலை கலாசார சங்கம் வழங்கி வரும் சமூக சேவையாளருக்கான 'இரத்தினதீப தேசிய சமூக விருதுகள்' வடக்கு ஊடக கல்விக் கல்லூரியின்' ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் சமூக நலன் கொண்டு ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வர்களான பொ.மாணிக்கவாசகம், ந.கபில்நாத், சு.வரதகுமார், கே.வசந்தரூபன், எம். ஜி.ரட்ணகாந்தன், எஸ்.கஜேந்திரகுமார் மற்றும் சிங்கள ஊடகங்களில் கடமையாற்றும் நான்கு ஊடகவியலாளர்கள் உட்பட 10 ஊடகவியலாளர்களுக்கும், சமூக சேவைகள் மற்றும் கல்வித்துறைகளில் பணியாற்றியவர்களுமாக 44 பேருக்கு இரத்தின தீப விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் கலந்து கொண்டு இரத்தின தீப விருதுகளை வழங்கினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ் தான் கலந்து கொண்டார். (க-100)

# முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும்!

வவுனியா, ஒக். 24

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தின் கல்வியியல் முதுமாணி மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும் நடைபெறவுள்ளது.

வவுனியா, றோயல் கார்டன் மண்டபத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தில் கல்வி பயிலும் கல்வியியல் முதுமாணி கற்கைப் பீட நான்காவது அணி மாணவர்களால் இச் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியியல் முதுகலைமாணி மாணவர் மன்றத் தலைவர் ல.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், யாழ் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-100)

# 'வவுனியா பசங்க' அமைப்பினரால் நேற்றுமுன்தினம் சிரமதானப் பணி!

வவுனியா, ஒக். 24

'பாதீனியம் அற்ற வவுனியாவை உறுவாக்குவோம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் 'வவுனியா பசங்க' அமைப்பினரால் வவுனியா வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா வீதி, நகரசபை ஊழியர் விடுதி வீதி என்பற்றில் வவுனியா நகரசபையின் அனுசரணையுடன் மாபெரும் சிரமதானப்பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் அமைப்பினரின் சிரமதான பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக த எவர் கிறீன் பரடைஸ் உணவகத்தினால் தேநீர் வழங்கப்பட்டது டன் பொதுமகன் நந்தன் என்பவரால் குளிர்பானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-100)



காலைக்கதிர் Kalaikkathir





# அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக புலம்பெயர் தமிழர்கள் போராட்டம்!




கொழும்பு, ஒக். 24

அரசியல்கைதிகளுக்கு ஆதரவாக லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டம், பிரித்தானிய பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.




இதன்போது, அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும், இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் மக்களின் காணிகளை மீள கையளிக்க வேண்டும், காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகளை வெளியிட வேண்டும்என்பனபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றும் பிரித்தானிய பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமது கோரிக்கைகளை வெளிப்படுத்த வேறு வழிகள் எதுவும் இல்லாமல் அரசியல் கைதிகளாக இருக்கின்ற எமது உறவுகள் போராடிகொண்டிருக்கின்றனர்.

ஆனாலும், இலங்கை அரசாங்கம் இதுவரை சரியான பதிலை வழங்கவில்லை.

இவ்வாறு இழுத்தடிப்பைத் தொடர்வதன் மூலம் உண்ணாவிரதம்இருக்கும் அரசியல் கைதிகள் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் மக்கள் தெரிவித்துள்ளனர்.




நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர்களான சொக்கலிங்கம் யோகலிங்கம், மணிவண்ணன், ஆறுமுகம் மற்றும் அகிலன் ஆகியோரும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களான பழனிவேல் கலைச்செல்வம், தர்மலிங்கம்கேதீஸ்வரி,ஜெயமாலினி மொகமெட் நஸ்லி உள்ளிட்ட பலரும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, அரசியல் கைதிகளின்விடுதலையை வலியுறுத்திய துண்டு பிரசுரங்களும் வீதிகளில் விநியோகிக்கப்பட்டன.

## கொழும்பில் நீதியமைச்சின் முன் ஆர்ப்பாட்டம்



தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கொழும்பில் நீதியமைச்சின் முன்னால் நேற்று மதியம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## 'ஒருமித்த நாடு' என்ற சொற்பதம் சிக்கலானது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

அரசமைப்பு உருவாக்கத்திற்கான செயற்குழுவினால் முன் மொழியப்பட்டுள்ள அறிக்கையில் 'ஏகீய' எனும் சிங்களப் பதத்துக்கு வழங்கப்பட்டுள்ளதமிழ்மொழிபெயர்ப்பான 'ஒரு மித்த நாடு' என்றசொல்பிரச்சினைக்குரியது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி யு. ஆர்.டி.சில்வாதெரிவித்தார்.

இன்று அவசரமாக கூடிய இச்சங்கம் அரசமைப்புத் தொடர்பாக முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கை குறித்து ஆராய்ந்ததாகவும், இதன் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'ஒருமித்த நாடு' எனும் சொல், பல பிராந்தியங்கள் இணைந்து உருவாகும் ஒரு நாடு என்ற கருத்தைக் கொடுப்பதாகவும் இது தற்பொழுதுள்ள 'ஏகீய' எனும் சிங்களச் சொல் குறிப்பிடும் கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இடைக்கால அறிக்கையிலுள்ள இப்பதம் சிக்கலுக்குரியது என்ற கருத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்த விடயத்தில் மாற்றம்செய்வது முக்கியமானது என்பதையும் இச்சங்கம் கூறிக் கொள்கின்றது எனவும் சட்டத்தரணி சில்வா மேலும் அறிவித்தார்.

நேற்று சுமார் ஒன்றரை மணி நேரம் சட்டத்தரணிகள் சங்க தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்திய மெய்வன்மை வீரர் ரயிலுடன் மோதி உயிரிழப்பு

### பம்பலப்பிட்டியில் நேற்று பரிதாபம்

இந்தியாவிலிருந்து விளையாட்டுப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்த சிரேஷ்ட இந்திய தடகள விளையாட்டுவீரர் ஒருவர் நேற்று நண்பகல் பம்பலப்பிட்டியவில் ரயில் மோதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ராஜேந்திரன் பனிடாய் (வயது -44) எனும் வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

'மோர்க்கன்டைல்' மெய்வன் மைப் போட்டிக்காக இலங்கை வந்த பத்துப் பேர்கொண்டஇந்தியமெய்வன்மை அணியில் இவரும் இடம்பெற்றிருந்தார் என்றும் -

அவருடன் வந்த சிலர் அருகில்தேயிலைப்பைக் கெற்றுக்களை வாங்கச் சென்றிருந்தசமயம் இவர் பஸ்ஸை விட்டு இறங்கி படம் எடுக்கச் சென்றார் என்றும் -

அப்போதே ரயிலுடன் மோதுண்டார் என்றும் - கூறப்பட்டது.

### கந்தசட்டி வீதியுலா, சூரசங்காரத்துக்காக

## நல்லூர் சூழலில் இன்றும் நாளையும் குறிப்பிட்ட நேரத்தில் வீதித்தடை

யாழ்ப்பாணம், ஒக்.24

நல்லூர்க்கந்தன்ஆலய கந்தசஷ்டி உற்சவகால சுவாமி வீதியுலா மற்றும் சூரசம்கார நிகழ்வுகளை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் குறிப்பிட்ட சில மணி நேரம் வீதித் தடை ஏற்படுத்தப்படும் என மாநகரசபைஆணையாளர் அறிவித்துள்ளார்.

வீதித்தடை நேரம் வருமாறு :-

இன்று செவ்வாய்க் கிழமை – பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை.

நாளை புதன்கிழமை – நண்பகல் 12 மணி முதல் மாலை 7 மணி வரை.

ஆலயச் சூழலில் ஏற்படும் பக்தர்கள் கூட்டத்தின் அதிகரிப்பை கருத்திற் கொண்டு, பருத்தித்துறை வீதிவழியாக யாழ்ப்பாணம் வருகின்ற வாகனங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் வாகனங்களும் மாற்றுப் பாதைகள் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் மாற்றுப் பாதைகளைப்பயன்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்என்றும்ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ)

## நவாலியில் மோ.சைக்கிளுக்கு தீவைத்த வாள்வெட்டுக் குழு

நவாலி பகுதியில் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளுக்கு வாள் வெட்டுக் குழுவினர் தீ வைத்து விட்டு தப்பிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இதன்போது 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் தீயில் எரிந்துள்ளதாக மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த எட்டுப் பேர் கொண்ட குழுவினரே இச் சம்பவத்தில் ஈடு பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்துள்ள குற்றத் தடுப்புப் பொலிஸார், சி.சி.ரி.வி கமராக்களின் உதவியுடன் சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.